## கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு

# கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்

முழுமையாக அரசாங்கத்திற்கு உடைமையான கம்பனி

# ஆண்டறிக்கை

## 2013/2014


**தலைமை அலுவலகம்**

100 - 1/3,

சேர் சிற்றம்பலம் எ.காடினர் மாவத்தை,

கொழும்பு 02.

தொலைபேசி : 011-2388662

தொலைநகல் : 011-2388663

மின்னஞ்சல் : kgll@sltnet.lk

இணையத்தளம் : www.kgraphite.lk

**சுரங்கம்**

கஹடகஹ சுரங்கம்

மதுராகொட

தொடங்கஸ்லந்த

தொலைபேசி : 0372252015

தொலைநகல் : 0374931711

# பொருளடக்கம்


| | |
|---|---|
| அறிமுகம் | **01** |
| தவிசாளரின் கண்ணோட்டம் | **02** |
| கணக்காய்வுக்குழுவின் அறிக்கை | **09** |
| கூட்டு நிறுவனத்தொலைநோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள் | **11** |
| நிறுவனம்சார் கட்டமைப்பு | **12** |
| பணிப்பாளரின் அறிக்கை | **13** |
| நிதிசார் வெளிப்பாடுகள் | **15** |
| வருடாந்தக் கணக்குகள் | **16** |
| கூட்டம் பற்றிய அறிவித்தல் | **17** |
| பதிலாள் படிவம் | **18** |

# அறிமுகம்

கஹடகஹ சுரங்கமானது இலங்கையின் வட மத்திய மாகாணத்தில் குருணாகல் மாவட்டத்தில் மதுரகொட, தொடங்கஸ்லந்தலவில் கொழும்பு பிரதான நகரத்திலிருந்து சுமார் 90 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்திருப்பதுடன், **கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்**டினால் முகாமை செய்யப்படுகின்றது. இது முழுவதுமாக அரசாங்கத்தின் உடமையான பொது வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனி என்பதுடன் கைத்தொழில், வாணிப அமைச்சின் அதிகாரத்திற்குட்பட்டதுடன், பங்குதாரராக பொதுத் திறைசேரியின் செயலாளர் இருக்கின்றார். கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்டின் பிரதான கொள்கை ஆக்க அமைப்பு நிறைவேற்றுத் தவிசாளரினால் தலைமை வகிக்கப்படுகின்ற பணிப்பாளர்கள் சபை என்பதுடன், கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட் அதனது நேர் வரிசை அமைச்சு மற்றும் பொதுத் திறைசேரியிடமிருந்து அதனது கூட்டு நிறுவனக் கொள்கையின் சாரம்சத்தைப் பெறுகின்றது

கஹடகஹ சுரங்கமானது, மலையுடன்கூடிய பிரதேசத்தில் 25 மீற்றர்கள் உயரத்தில் அமைந்துள்ளதுடன், கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட் சுமார் 102 ஏக்கர்கள் இறையிலி உரித்துக்களை கொண்டதாயினும் மேற்பரப்பு நிலத்தின் சில ஏக்கர்களில் மட்டுமே அமைந்திருக்கிறது. சுரங்கமானது 500 மீற்றர்கள் அதியுயர் அகலத்தினைக் கொண்டதாக அமைந்துள்ளது . அதற்கு மேலதிகமாக, 102 ஏக்கர்களில் 75 ஏக்கர்களில் தென்னைப் பயிர்ச்செய்கையும் **'கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்டினால்'** கையாளப்படுகின்றது.

**இலங்கையில் ஆழமான சுரங்கமான கஹடகஹவானது 2000 அடி (610 மீற்றர்) ஆழமாக இருப்பதுடன் 2 சுரங்க வழிகளைக் கொண்டது. கஹடகஹவில் 1133 அடி (345 மீற்றர்) ஆழத்தில் ஒன்றும் மற்றும் கொலோன்கஹவில் மற்றையது 330 அடி வரையும் (101 மீற்றர்கள்) செல்கின்றது.** கீழேயுள்ள தொடர் திருகுவிட்டங்களாலான சுரங்கவழி மூலம் 2000 அடி (610 மீற்றர்கள்) வரை பயணிக்கலாம். 2000 அடி மட்டத்தை அடையும் வரை பயணிப்பதற்காக 1132 அடி மட்டம் வரை வேலையாளர்கள் கீழ் நிலத்தளத்திற்கு அனுப்புவதற்காக பிரதான திருகுவிட்டம் பயன்படுத்தப்படுகிறது.

இலங்கையில் போகல சுரங்கம் மற்றும் கஹடகஹ சுரங்கம் ஆகிய பிரபல்யமான இரண்டு பிரதான சுரங்கங்கள் உள்ளன. முன்பு கஹடகஹ மற்றும் கொலங்கஹ சுரங்கங்கள் என்பன வெவ்வேறாக இயங்கின. இவை 1872 ஆம் ஆண்டிலிருந்து தொழிற்பட்டிருந்தது. தற்போது இவ்விரண்டு சுரங்கங்களும் ஒன்றிணைக்கப்பட்டு இயங்குகிறது.

## கஹடகஹவின் தனித்துவமான உற்பத்திப்பொருள்

உயர்ரக இயற்கைத்திரள்வகைப் பளிங்குருக்காரீயத்திற்கென உலக அங்கீகாரம் பெற்ற வணிக ரீதியான ஒரேயொரு வழங்குனர் இலங்கையாகும், குறிப்பாக கஹடக காரீயச்சுரங்கத்திலிருந்து 99 % மேற்பட்ட காபனைக் கொண்ட அதிதூய இயற்கைத்திரள்வகை காரீயம் பூரண பளிங்குரு வடிவில் அகழ்ந்தெடுக்கப்படுகிறது. இவை திரள், ஊசியுரு, நுண்தகட்டு வகை மற்றும் கீற்று வடிவிலமைந்துள்ளது. இயற்கை பளிங்குருத்திரள் வகைக் காரீயச்சந்தையின் ஏகபோக உரிமையைப் பெற்ற இழிவளவு மாசுக்களையுடைய உயர் சதவீத காபனைக் கொண்ட பளிங்குருத்திரள் வகை கஹடகஹக் காரீயம் உலகச் சந்தையில் தனித்துவமிக்க உற்பத்திப் பொருளாக அங்கீகாரம் பெற்று அதன் நற்பெயர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

# தவிசாளரின் கண்ணோட்டம்

ஆய்வாண்டு காலப்பகுதியில் கம்பனியின் செயலாற்றுகையானது காத்திரமான நேர்ப்பாடான போக்கைக் காட்டியுள்ளது. கடந்த பல தசாப்தங்களாக மேற்கொள்ளும் மூலப்பொருள் வடிவ காரீய ஏற்றுமதிக்கு மேலாக பெறுமதி சேர்க்கும் நிகழ்ச்சித் திட்டம் பிரதானமாக குவிமையப்படுத்தப்பட்டது.

## உற்பத்தி



2013/2014 ம் நிதியாண்டில் சுரங்கத்தில் இருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட காரீயம் (ROM) 848 மெ.தொன்னாகும். இது திட்டமிடப்பட்ட இலக்கான 1000 மெ.தொன்னின் 85% ஆகவும் காணப்படுகின்றது. கடந்த ஆண்டு உற்பத்தியான 1018 மெ.தொன்னை விட 170 மெ.தொன் இவ்வருட உற்பத்தியில் குறைவு ஏற்பட்டுள்ளது. ஆழமான பகுதியில் அகழ்வு நடவடிக்கைகள், முழுமையான அகழ்வு மேற்கொண்டதனால் மேல் மட்ட திரள்கள் குறைவாகக் காணப்படுதல், அதிக மழை காரணமாக 0.5% இலிருந்து 84.5% வரை நீரகற்றும் ஆற்றல் அதிகரித்தமையினால் ஏற்பட்ட பெரும்பாதிப்பு போன்ற காரணிகள் இந்நிலை ஏற்பட்டுள்ளது.



## விற்பனை

பதப்படுத்திய மூலப்பொருள் வடிவ காரிய விற்பனை 537.8 மெ.தொன்னில் இருந்து 793.5 மெ.தொன்னாக அதிகரித்துள்ளதுடன் வருவாயானது 91.6 மில்லியன் ரூபாயிலிருந்து 144.11 மில்லியன் ரூபாய் வரை அதிகரித்துள்ளது. இது கடந்த வருடத்தை விட 57.2% அதிகரிப்பாகும். இதற்கான காரணம் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியத்திற்கான 97/99 % C மற்றும் 99+% C வகை உயர்தர பதப்படுத்திய காரீய விற்பனையாகும். காரியச் சந்தையானது பிரத்தியேக சந்தையென்பதால் வழமையாக பாரம்பரிய கொள்வளவாளனிற்கே தொடர்ந்தும் எமது காரீயம் விற்பனை செய்யப்படுகின்றது. சந்தையின் நிலைபேறான தன்மையைக் கருத்திற் கொண்டு வணிகத் திணைக்களத்தினூடாக இலங்கை தூதுவராலயங்களின் உதவியுடன் புதிய கொள்வனவாளர்களை கவர்வதன் மூலம் சந்தையை விருத்தி செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் குறிப்பிடத்தக்க துலங்களின்மையால் தொடர்ந்தும் பாரம்பரிய கொள்வனவாளர்களிலேயே தங்க வேண்டியுள்ளது.






## நிதி நிலைமை

2012/2013 ம் ஆண்டு தேறிய இலாபமான 15.6 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடும் போது 2013/2014 ஆம் ஆண்டில் வரிக்குப் பின்னரான தேறிய இலாபமாக 16.6 மில்லியன் ரூபாயை கம்பனி பெற்றுள்ளது. நிலைபேறற்ற கொள்வனவு விற்பனைச் சந்தை காரணமாக கம்பனியின் வருமானமும் இலாபமும் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடத்திலிருந்து விலையதிகரிக்கும் பொறிமுறையை 6 மாதகாலத்திற்கொருமுறையாக மாற்றியமை கம்பனியின் வருவாயில் பெரும் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. காரியச் சந்தையின் பிரத்தியேகத் தன்மை பற்றிய அதிக கவனத்துடன் விலையதிகரிப்புப் பொறிமுறையை நிர்ணயிப்பது அவசியமாகும்.

31.3 மில்லியன் ரூபா சுரங்க மேம்படுத்தல் , உட்கட்டமைப்பு மற்றும் பொறித் தொகுதி , உபகரணங்கள் என்பவற்றிற்காக முதலீடு செய்யப்பட்டுள்ளது.

கம்பனியின் மொத்த இலாப மிகை 63.39% ஆகும். மற்றும் தேறிய இலாப மிகை 14.69% என்பதுடன் 2013/2014 இற்கான உற்பத்தித் திறன் ஒரு மனித வேலைச்சுற்றுக்கு (shift) 51 கிலோ கிராமாகும். கம்பனியானது 10 மில்லியன் ரூபா வருமான வரி நிலுவையை செலுத்துவதற்கு உள்நாட்டு இறைவரித்திணைக்களத்துடன் உடன்பட்டுள்ளதுடன் பங்கிலாபமாக 1.06 மில்லியன் ரூபா செலுத்தப்படவுள்ளது.

## நிலக்கீழ் அபிவிருத்தி (சுரங்கம்)



வைரத்துளையிடல் பொறிமுறையின் விளைவாக 1132 அடி மட்டத்தில் பொருளாதாரப் பயன்மிக்க 06 காரீயத்திரள்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் மேல் நோக்கிய மற்றும் கீழ் நோக்கிய வேலைத்தளங்கள் ஆரம்பிக்கப்பட்ள்ளன. நிலக்கீழ் பராமரிப்பு மேம்படுத்தப்பட்டுள்ளதுடன் காற்றோட்டத் தொகுதியும் மேம்படுத்தப்பட்டுள்ளது. பிரதானமாக 1132 அடியிலிருந்து 2000 அடி வரையான 2ம் சுரங்க வழியை அமைப்பதில் கவனஞ் செலுத்தப்படுகின்றது. இந்நிகழ்ச்சித் திட்டம் 1990 ம் ஆண்டிற்குப் பின் ஆய்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டது.



2ம் சுரங்க வழிக்கான ஆரம்ப வேலைகள் இவ்வருடம் 1132 அடியிலிருந்து 1280 அடி மட்டம் வரை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



பிரதான சுரங்க வழி 1132 அடி வரையும் விரிவு படுத்தப்பட்டுள்ளது. 2000 அடி மட்டத்திலிருந்து காரீயத்தை மேலேற்றுவது அதிக செலவு மிக்கதும் சிரமமானதுமான காரியமாகும். 2ம் சுரங்க வழி நிறுவப்படும் போது மேலேற்றல் செலவு குறைக்கப்படும்.

## பொதியிடல் மற்றும் பதப்படுத்தல் முறைமை





செயன்முறைப்படுத்தல் தொகுதி, நீளுருலைக்கலம் (trommel), கடத்தி உபகரணம் (Conveyer) போன்ற உபகரணங்கள் பொருத்தப்பபட்டும், கடத்து குழாய் (Chute) நிறுவப்பட்டும் புதுக்கட்டிடத் தொகுதியை நிர்மாணித்தும் மேம்படுத்தப்பட்டுள்ளது. உலர்த்தல் பகுதி, களஞ்சியப் பகுதி என்பன ஒரே தளத்தில் நிர்மாணிக்கப்பட்டு சுரங்கத்திலிருந்து அகழப்பட்ட காரியத்தை (ROM) கைப்பாடாக வகைப்படுத்தி, துணிக்கையின் பருமன், காபனின் தரத்திற்கேற்ப பௌதிக முறையில் தரம்பிரிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட 50-60 வருடம் வரை பழமை வாய்ந்த உடைந்த கட்டிடம் அகற்றப்பட்டது. இப்புதிய கட்டிட நிர்மாணம் மூலம் அன்றாடம் அகழப்பட்டு மேலேற்றப்படும் காரியத்தை அதே நாளில் நிகழ்நிலையில் (Online) செயன்முறைக்குட்படுத்தும் வாய்ப்பு காணப்படுகின்றது. கைப்பாடாக வகைப்படுத்தும் நேரத்தை வீணாக்காது ஊழியர்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்த பிரதான பிரித்தல் தொகுதி பகுதியளவில் பொறிமுறையாக்கம் செய்யப்பட்டுள்ளது.







புதிய கட்டிடத் தொகுதியை நிர்மாணிக்கும் போதும் தற்போதைய கட்டிடங்களை புனர்நிர்மாணம் செய்யும் போதும் இதற்கு சமாந்தரமாக உள்ள பாதைகள் மீள்நிர்மாணம் செய்யப்பட்டதுடன் வளாகமும் சிறப்பாக பேணப்பட்டது.

பொதியிடல் தொகுதியும் பொதியிடலின் தரமும் மேம்படுத்தப்பட்டுள்ளது.

## பெறுமதி சேர்ப்பு - முடிவுப் பொருள் அபிவிருத்தி



(i) ஏனைய அமைப்புக்களுடன் இணைந்து கஹடகஹ கிறபைட் லங்கா லிமிட்டடானது, மூலப்பொருள் காரீயத்திலிருந்து புடக்குகைகளை உற்பத்தி செய்வதற்கான அடிப்படை ஆய்வை மேற்கொண்டது. ஆய்வின் பின் பெறப்பட்ட வெற்றிகரமான பெறுபேற்றினால் பெரும்பாலும் இந்தியா மற்றும் ஜேர்மனியிலிருந்து இறக்குமதி செய்யப்படும் புடக்குகைகளுக்கு ஒத்த தரத்திலான புடக்குகைகள் கைத்தொழில் அளவிலான அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.



எமது ஆரம்ப கட்ட அவதானிப்பின் படி புடக்குகை சந்தையானது, உள்ளூர் உலோகவார்ப்புக் கைத்தொழிலிலும் ஆபரணக் கைத்தொழிலிலும் தங்கியுள்ளது. புடக்குகை முடிவுப் பொருளை கருத்திற் கொள்ளும் போது தற்போது கைத்தொழில் அளவிலான முடிவுப் பொருள் உற்பத்தி செய்யும் முடியுமான நிலை காணப்படுகின்றது.

(ii) புடக்குகைக்கு மேலதிகமாக கஹடகஹ கிறபைட் லங்கா லிமிட்டின் ஆய்வு மற்றும் அபிவிருத்தி மூலம் பெறுமதி சேர்த்தல் கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அலகுடன் கஹடகஹ கிறபைட் லங்கா லிமிட்டட் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. இவ்வொப்பந்தத்தின் படி கொழும்பு பல்கலைக்கழகம் பின்வரும் உற்பத்திகளை அபிவிருத்தி செய்து உற்பத்திக்கான வழிமுறைகள் முன்வைக்கப்பட்டுள்ளது.

- மோட்டார்களில் பயன்படுத்தும் காபன் கடத்தும் தூரிகைகள்
- காரீய மசகுப் பதார்த்தம் (Grease)
- காரீய இணைப்பிறுக்கி (Gasket)
- காரீய கடத்தும் பசை



## காரீய கடத்தும் தூரிகை



அடிப்படை ஆய்வு நடவடிக்கைகள், ஆய்வு கூட அளவிலான உற்பத்தி என்பன கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அலகினால் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் எமது ஆரம்பகட்ட சந்தை ஆய்வின் மூலம் 335 வகையான காபன் தூரிகைகள் , மின் மோட்டார், தரை மினுக்கி (Floor polisher) மற்றும் தச்சுச் செப்பமாக்கி (Carpenter sanders) என்பனவற்றில் பயன்படுத்தப்படுவது அறியப்பட்டுள்ளது. கடத்தும் தூரிகைகளின் உற்பத்தி மற்றும் வணிக ரீதியான உற்பத்தி என்பன கஹடகஹ கிறபைட் லங்கா லிமிட்டினால் முன்னெடுக்கப்படுகின்றது.

## காபன் மசகுப்பதார்த்த உற்பத்தி (Grease)




காபன் மசகுப்பதார்த்தம் தொடர்பான அடிப்படை ஆய்வுப் பெறுபேறுகளை கொழுப்புப் பல்கலைக்கழகம் இவ்வருடத்தில் சமர்ப்பித்ததுடன் கஹடகஹ கிறபைட் லங்கா லிமிட்டினால் ஆரம்பகட்ட மாதிரிகள் தயாரிக்கப்பட்டு பரிசோதனைக்காக கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப் பட்டுள்ளது. 250-500 கிலோகிராம் அளவில் உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்ப்பதுடன் நுகர்வோர்களின் மூலம் தரத்தை பரிசோதிக்கவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

## காரீய இணைப்பிறுக்கி உற்பத்தி (Gasket)



காரீய இணைப்பிறுக்கியை உற்பத்தி செய்வதற்கான ஆய்வு கூட ஆராய்ச்சிகள் கொழும்பு பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டு முடிவுப்பொருள் உற்பத்தி பற்றி தீர்மானிப்பதற்கு ஆய்வு முடிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இச்செயன்முறையில் நீரை அகத்துறிஞ்சாத காகிதம் வெவ்வேறு பருமன்களில் பெறப்பட்டு பசையிடப்பட்டு காகிதம் மீது நுண்ணிய பருமனுடைய காரீயத்தினை பரப்பி சீரான அமுக்கத்தைப் பிரயோகித்து உருளைகளில் அழுத்தப்படுகின்றது. ஆய்வு கூட உற்பத்தியும் வணிக அளவிலான உற்பத்தியும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு விருத்தி செய்யப்பட வேண்டும்.

## காரிய கடத்தும் பசை



**காரிய கடத்தும் பசை மூலம் இணைக்கப்பட்ட இணைப்புக்கள்**

காரீய கடத்தும் பசை கொழும்புப் பல்கலைக்கழகத்தினால் பரிசோதிக்கப்பட்டுள்ளது. இது எளிய கைத்தொழில் செயன்முறையாகும். கைத்தொழில் அளவிலான உற்பத்தி பற்றிய கற்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இரு மேற்பரப்புக்களை பிணைப்பதற்காக பசை பயன்படுத்தப்படுகின்றது. பசையாக பயன்படுத்தும் பதார்த்தம் மேற்பரப்பை நனைக்க வேண்டும், மேற்பரப்பின் மீது ஒட்ட வேண்டும், பிரயோகிக்கப்பட்ட பின் வலிமைத்தன்மையை உருவாக்க வேண்டும், உறுதியாகக் காணப்பட வேண்டும். கடத்தும் பசையானது பல்வேறு இலத்திரனியல் பொதியிடும் பிரயோகங்களில் (die attachment, solder less interconnections, component repair, display interconnections and heat dissipation…) பெரும்வாரியாக உபயோகிக்கப்படுகின்றது.

கடத்தும் பசையை உற்பத்தி செய்வதற்கான மூலப்பொருட்கள் பல்பகுதியப்பதார்த்தங்களாகும். எபொக்சி ரெசின்கன் மற்றும் பீனோல் போர்மல்டிகைட்டு மற்றும் காரீயமாகும்.

## தென்னை பயிரிச்செய்கை

முன்பு கைவிடப்பட்டிருந்த 52 ஏக்கர் நிலத்தில் தென்னை பயிரிடப்பட்டுள்ளது. இப் பெருந்தோட்டமானது சிறப்பாகப் பேணப்படுவதுடன் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள், வளமாக்கிகள் வழங்கப்படுகின்றன. இதன் விளைவாக தென்னைப் பயிரிச்செய்கை மூலமான அறுவடை குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது.



## ஊழியர்களுடனான உறவு

ஊழியர்களின் உற்பத்தித் திறன் , வாழ்க்கைத் தரத்தை அதிகரிக்கும் நோக்குடன் பங்கு பற்றும் முகாமைத்துவ அணுகு முறை மூலம் ஊழியர்களுடனான உறவு பேணப்பட்டது. குறிப்பாக சுரங்கத் தொழிலாளர்களின் கலாச்சாரமானது ஏனைய ஊழியர்களின் கலாச்சாரத்தை விட பாரியளவு வேறுபட்டதாகும். ஆபத்துமிக்கதும் கடினமானதுமான வேலைச் சூழல் இறைவனின் செயற்பாடு பற்றிய உளவியல் எண்ணக்கருக்கள் என்பன இதற்குக் காரணமாகும்.

ஊழியர்களின் பாதுகாப்பு மற்றும் நலனைக் கருத்திற் கொள்ளும் போது நியூமோனியோகோனியோனிஸ் நோயிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள சகல சுரங்க மற்றும் பதனிடல் பகுதி ஊழியர்களினதும் நெஞ்சுப் பகுதி X – கதிர்ப்பட அறிக்கையொன்றைப்பெற்று மேற்பார்வையிடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ரிதீகம மாவட்ட வைத்திய அதிகாரியின் ஆலோசனையின் கீழ் ரிதீகம மாவட்ட வைத்தியசாலையிலிருந்து ஒரு வைத்தியர் ஒவ்வொரு வாரமும் வருகை தந்து ஊழியர்களுக்கும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களுக்கும் தேவையான மருத்துவ சிகிச்சைகளை வழங்கவும் நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அடிப்படை வசதிகளையும் மருந்துகளையும் கொண்ட எமது மருத்துவ நிலையத்தில் இந்நிகழ்வு இடம் பெறுகின்றது.

அகழ்விற்கான பாதுகாப்பு உபகரணங்களும் பாதுகாப்பு ஆடையும் அவசியமான நேரங்களில் வழங்கப் படுகின்றது.



கம்பனியில் 120 ஊழியர்கள் காணப்படுகின்றனர். அவர்களில் 57 பேர் நிலக்கீழ் தொழிலாளர்களாவர். ஏனையோர் பராமரிப்பு, பதனிடல் மற்றும் நிருவாகப்பிரிவுகளில் கடமையாற்றுகின்றனர்.

மொத்த வேதனங்கள், சம்பளங்கள் , வெகுமதி ஊ.சே.நி மற்றும் ஊ.ந.பொ.நி பங்களிப்புக்கள் என்பன 54.5 மில்லியன் ரூபாய்களாகும். கடந்த வருடம் இத் தொகை 43.8 மில்லியன் ரூபாயாக காண்பபட்டது.

2006 ம் ஆண்டிலிருந்து தற்போது வரை வேதனச்சபை மற்றும் ஏனைய நியதிச் சட்ட ஏற்பாடுகளுக்கமைய ஊழியர்களின் சம்பளம் 362% அளவில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

## முடிவுரை

“மஹிந்த சிந்தனைக்” கொள்கையின் படி தனியார் மயப்படுத்தல் கொள்கையை புறமொதுக்கி இலாபமீட்டாத தனியார் மயப்படுத்த வேண்டிய நிறுவனமாக இனங்காணப்பட்ட கஹடகஹ கிறபைட் லங்கா லிமிட்டட் நிறுவனத்தை நிலைத்திருக்கக் கூடிய அரசாங்கப் பொது முயற்சியாக மாற்ற முடிந்தது.

2006 ம் ஆண்டிற்குப் பின்னரான இத்தொழிற்பாட்டிற்குப் பின் அகழ்வுக் கைத்தொழில் துறையில் குறிப்பிடத்தக்களவு செல்வாக்குச் செலுத்த எம்மால் முடிந்தது. குறுகிய காலப்பகுதிக்குள் எமது அடைவுகளினூடாக ‘‘மஹிந்த சிந்தனை’’ கொள்கையின் படி (பக்கம் 48) பெறுமதி சேர்த்தலூடான அபிவிருத்தி என்ற எதிர்கால நிகழ்ச்சி திட்டத்தில் சிறப்பாக கவனஞ் செலுத்த முடிந்ததுடன் தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்யும் வகையில் காரீய விற்பனையை விருத்தி செய்யவும் முடிந்தது.

எனது சக பணிப்பாளர்கள் என்னைப் பலப்படுத்தினார்கள். அவர்களின் தளராத ஒத்துழைப்பிற்கும் கூட்டாகப் பணியாற்றியமைக்கும் ஆய்வாண்டில் கம்பனியின் நலனுக்காகவும் இலாபத்திற்காகவும் வழங்கிய அர்ப்பணிப்பு மிக்க சேவைக்கும் நான் நன்றியுடையவனாவேன்.

கஹடகஹ கிறபைட் லங்கா லிமிட்டடின் வெற்றிகரமானதும் இலாபமீட்டும் வகையிலுமான சிறப்பு செயலாற்றுகையை அடைவது கம்பனியின் சகல ஊழியர்களினதும் அர்ப்பணிப்பு மற்றும் கடமையுணர்ச்சியின்றி சாத்தியமானதல்ல. குறிப்பாக நிலக்கீழ் ஊழியர்களைக் குறிப்பிடலாம். இவ்வருடத்தில் இவர்களின் அளவிலான முயற்சிகளுக்கான உளமார்ந்த பாராட்டைக் இங்கு பதிவு செய்ய விரும்புகின்றேன்.

இச்சந்தர்ப்பத்தில் கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்டிற்கு தமது ஆதரவை வழங்கிய கௌரவ கைத்தொழில், வாணிப அமைச்சர், கௌரவ கைத்தொழில், வாணிப பிரதி அமைச்சர் , கைத்தொழில், வாணிப அமைச்சின் செயலாளர் மற்றும் பதவியினர், பொதுத் திறைசேரி செயலாளர் மற்றும் பதவியினர் ஆகியோருக்கும் விசேடமாக பணிப்பாளர்கள் சபைக்கும் கஹடகஹ லங்கா கிறபைட் லிமிட்டட்டின் சகல ஊழியர்களுக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இறுதியாக, இவ்வருடமும் எமது கம்பனியின் கணக்காய்வாளர்களாக எவ்வித தயக்கமுமின்றி திருப்திகரமான சேவையை நல்கியிருந்த திருமதி.ஆர்.நாகசிங்க & கம்பனி பட்டயக் கணக்காளர்கள் மற்றும் பதவியினருக்கு நான் நன்றி கூறவில்லையெனில் நான் எனது கடமையிலிருந்து விலகியவனாவேன்.

டி.கலன்சூரிய
தவிசாளர்
**கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்**
03 செப்டம்பர் 2014

# கணக்காய்வுக்குழுவின் அறிக்கை

### கணக்காய்வுக்குழுவினரின் பணி

பணிப்பாளர் சபைக்கு தாம் கண்டறிந்தவைகளை அயிக்கையிடும் கணக்காய்வுக்குழுவின் பிரதான பணியானது நிதியியல் அறிக்கையிடலினதும் கணக்காய்வுச் செயன்முறையினதும் நேர்மைத்தன்மையை உறுதிப்படுத்தலும் காத்திரமான உள்ளகக்கட்டுப்பாடுகளையும் இடர் முகாமைத்துவ முறைமையையும் பேணுகின்றமையை உறுதிப்படுத்தலுமாகும். கணக்காய்வுக்குழுவின் பொறுப்பானது பின்வருவனவற்றை கண்காணித்தல் மற்றும் மீளாய்வு செய்தலை உள்ளடக்கியதாகும்.

- நிதியியல் கூற்றுக்களின் நம்பகத்தன்மையும் நேர்மையும்
- உள்ளகக்கட்டுப்பாடுகளின் நிறைவுத்தன்மையும் வினைதிறனும்
- உள்ளக மற்றும் வெளிவாரி கணக்காய்வுத் தொழிற்பாடுகளின் வினைதிறனும் செயலாற்றுகையும்
- நியதிச்சட்ட மற்றும் ஒழுங்குவிதித் தேவைப்பாடுகளுடனான இணக்கப்பாடு

### கணக்காய்வுக்குழுவின் அமைப்பு

கணக்காய்வுக்குழு மூன்று நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்களை உள்ளடக்கியதாக கம்பனியின் ஒரே பங்குதாரரான திறைசேரியினால் முன்மொழியப்படும் நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளரின் தலைமையின் கீழ் சபையின் செயளாலரை அழைப்பாளாரகக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

திருமதி.ஏ.ஆர்.விக்கிரமசிங்க – தலைவர்
திரு.ஏ.யு.எம்.யாசீர் – பணிப்பாளர்
திரு.ரி.எம்.ஏ.பங்சஜயா – பணிப்பாளர்

### கூட்டங்களும் வரவும்

2013 ம் ஆண்டில் 4 தடவைகள் கணக்காய்வுக்குழு கூடியதுடன் பணிப்பாளர் சபையினால் பணிக்கப்பட்ட விடயங்கள் பற்றிக் கலந்துரையாடியது. கம்பனியின் முகாமைத்துவ அதிகாரிகள் , கைத்தொழில் அமைச்சினால் நியமிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வாளர்கள் மற்றும் கணக்காளர் ஆகியோர் தேவைப்படுமிடத்து கூட்டங்களுக்கு அழைக்கப்பட்டனர்.

### செயற்பாடுகள்

கணக்காய்வுக்குழுவானது கணக்குகளினதும் வெளிவாரி கணக்காய்வு அறிக்கைகளினதும் வரைவுகள் , வெளிவாரி ஒப்பந்தச் சேவை மூலம் அமர்த்தப்பட்ட உள்ளகக் கணக்காய்வாளரின் உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் , முன்னேற்ற அறிக்கைகள் , விற்பனை அறிக்கைகள் , நிதி முகாமைத்துவம் , மோசடி , பிழை முறைமைப்பாதுகாப்பு தொடர்பான இடர்கள் போன்ற விடயங்களை மீளாய்வு செய்தும் கலந்தாலோசித்தும் தனது கடமைகளை நிறைவேற்றியது. கண்காய்வுக்குழு இவ்வறிக்கைகளை மீளாய்வு செய்துள்ளதுடன் தற்போதைய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை வலுப்படுத்துவதன் மூலம் கம்பனி எதிர்நோக்கும் மோசடி , பிழை , தொழிற்பாட்டு மற்றும் நிதியியல் இடர்கள் நிகழ்வதற்கான சாத்தியப்பாட்டையும் அதனாலான விளைவுகளையும் இழிவளவாக்குவதற்காக செயற்படுத்தக்கூடிய மேலதிக கட்டுப்பாடுகளையும் இடர் நீக்கல் மூலோபாயங்களையும் பரிந்துறை செய்தது.

### உள்ளக கட்டுப்பாட்டு முறைமை

2013 ம் ஆண்டில் உள்ளகக் கணக்காய்வாளர்கள் நிறைவேற்றிய கணக்காய்வுகளின் பெறுபேறுகள் , அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (COPE) அறிக்கைகள் , இறுதிக்கணக்குகள் , வெளிவாரி கணக்காய்வாளர்களினால் வழங்கப்பட்ட முகாமைத்துவக் கடிதம் மற்றும் வரவு செலவுத்திட்டம் போன்றவற்றை குழு மீளாய்வு செய்தது. உள்ளகக் கணக்காய்வாளர் , பரிந்துரைக்கப்பட்ட ஏதேனும் பரிந்துரைகளினை செயற்படுத்தியமை உட்பட வினவப்பட்ட விடயங்களுக்கான முகாமைத்துவத்தின் துலங்கள்களின் நிறைவுத்தன்மை பற்றியும் கவனஞ் செலுத்தினார்.

**இணக்கப்பாடு**

இலங்கை கணக்கீட்டு நியமங்களின் தேவைப்பாடுகள் , 2007 ம் ஆண்டு 7 ம் இலக்க கம்பனிச்சட்டம் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் திணைக்களத்தின் வழிகாட்டல்கள் , உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வழிகாட்டல்கள் ஊழியர் சேமலாப நிதியம் , ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் , தேசிய கொள்வனவு முகவர் நிலைய (NPA) வழிகாட்டல்கள் மற்றும் காலத்துக்கு காலம் வெளியிடப்படும் சுற்றுநிருபங்கள் என்பவற்றுடன் இணக்கப்பாட்டுடையதாகக் காணப்பட்ட, குறித்த காலத்திலும் நம்பகத்தன்மையுடனும் வெளியிடபட்பட்ட நிதிக் கூற்றுக்களை வெளியிட முன்பு நியதிச்சட்டங்களுடன் இணைவாகக் காணப்படுவதை உறுதிப்படுத்துவதில் சபைக்கு கணக்காய்வுக்குழு உதவியது.

குழு சார்பாக

கணக்குாய்வுக்குழுவின் தலைவர்

## கூட்டு நிறுவனத் தொலைநோக்கு

"உலகத்தில் இயற்கையான பளிங்குருத்திரள் வகைக் காரீயத்தின் தனித்துவமான மூலமாக விளங்குதல்"

## கூட்டு நிறுவனச் பணிக்கூற்று

"நாட்டில் காரீயக் கனிப்பொருள் மூலங்களில் உச்சப்பயன்பாட்டுடன் வெளிநாட்டுச் செலாவணியைச் சம்பாதிப்பதன் மூலம் இலங்கையின் பொருளாதார, சமூக அபிவிருத்தியில் பயனுறுதிவாய்ந்த, வினைத்திறனுடைய செயலூக்கமுள்ள பங்குதாரரொருவராக இருத்தல்"

## கூட்டுநிறுவனக் குறிக்கோள்கள்

"கம்பனியின் குறிக்கோள்கள், உயர் தரமான தூய்மையான காரீயத்தை ஏற்றுமதி செய்வதற்காக அகழ்தல், பதப்படுத்துதல் மற்றும் உயர்ந்தபட்ச பெறுமதியைச் சேர்த்தலும், காரீய அடிப்படையிலான கைத்தொழில்களை விருத்திசெய்தலுமாகும்."

# நிறுவனம்சார் கட்டமைப்பு

கஹடகஹ கிறைபைட் லங்கா லிமிடெட், நிறைவேற்றுத் தவிசாளர் மற்றும் பணிப்பாளர்கள் சபையொன்றின் கீழ் ஒழுங்கமைக்கப்படுகின்றது.

கம்பனியின் தொழிற்பாடானது பின்வருகின்ற விடயப்பரப்புகளின் கீழ் ஒழுங்கமைக்கப்படுகின்றது.

- ✓ அகழ்தல்
- ✓ பதப்படுத்துதல்
- ✓ பொறிமுறைசார் மற்றும் மின் பொறியியல்
- ✓ சந்தைப்படுத்தல்
- ✓ தன்னாள்
- ✓ நிருவாகம்
- ✓ நிதி மற்றும் கணக்கீடு
- ✓ விநியோகங்கள் மற்றும் களஞ்சியங்கள்
- ✓ பொது சிவில் பொறியியல்
- ✓ பாதுகாப்பு

# கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்

## 2014 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான பணிப்பாளர்களின் ஆண்டறிக்கை

2014 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை பணிப்பாளர்கள் இத்தாள் சமர்ப்பிக்கின்றனர். இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக, அதில் தெரிவிக்கப்பட்டவாறு நிதிக் கூற்றுக்களைச் தயாரிப்பதும், சமர்ப்பிப்பதும் பணிப்பாளர்கள் சபையின் பொறுப்பாகும்.

**பிரதான செயற்பாடுகள்**

கம்பனியின் பிரதான செயற்பாடுகள் பின்வருவனவற்றைக் கவனத்திலெடுத்துள்ளன.

1. 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானிக் கட்டளையினால் உருவாக்கப்பட்ட அரச அகழ்வு, கனிப்பொருள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் கொலொன்கஹா, கஹடகஹவில் குறித்தொதுக்கப்பட்ட வணிக அலுவல்களைப் வெற்றிகரமாக கொண்டுநடாத்தல்.

2. கூறப்பட்ட அரச அகழ்வு, கனிப்பொருள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் கொலன்கஹ - கஹடகஹ என்று குறித்தொதுக்கப்பட்ட பகுதியினால் உடமையாகக்கொள்ளப்பட்ட, பயன்படுத்தப்பட்ட அசையும், அசையாச் சொத்துக்களின் சொத்துடமைக்கு பின்னுரிமையாளராதல்.

**நிதிப் பெறுபேறுகள்**

**நிதிப் பெறுபேறுகள் இந்த அறிக்கையின் 04 ஆம்** பக்கத்தில் நிதிக் கூற்றில் தரப்படுகின்றன.

**ஆதனம், பொறித்தொகுதியும் உபகரணமும்**

ஆதனம், பொறித்தொகுதியும் உபகரணமும் என்பவற்றில் நிகழ்ந்த அசைவுகள் ஆய்வாண்டு காலப்பகுதியிலுள்ள நிதிக் கூற்றின் குறிப்பு 18 இல் தரப்படுகின்றது.

**முதலீடுகள்**

ஊழியர்களின் பணிக்கொடையை வழங்குவதற்காக கம்பனி, நிரந்தர வைப்புக்களில் 5,675,000.00 ரூபாவை முதலீடு செய்துள்ளது.

**அன்பளிப்பு**

கணக்கீட்டுக் காலப்பகுதியில் கம்பனி அன்பளிப்பினைச் செய்திருக்கவில்லை.

**கணக்காய்வு அறிக்கை**

நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அறிக்கை ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**பணிப்பாளர்களின் இளைப்பாறல்**

தாபன அமைப்பு விதிகளுக்கமைவாக **திரு.ரி.எம்.ஏ.பங்சஜயா** அவர்கள் சுழற்சி முறைப்படி இளைப்பாறுகிறார் என்பதுடன் தொடர்ந்து பணியிலுள்ள பணிப்பாளர்களின் ஏகமனதான ஆதரவுடன் அவர் மீள் தெரிவிற்குத் தகைமை பெற்றுள்ளார்.

தாபன அமைப்பு விதிகளுக்கமைவாக **திரு.ஏ.யு.எம்.யாசீர்** அவர்கள் சுழற்சி முறைப்படி இளைப்பாறுகிறார் என்பதுடன் தொடர்ந்து பணியிலுள்ள பணிப்பாளர்களின் ஏகமனதான ஆதரவுடன் **அவர்** மீள் தெரிவிற்குத் தகைமை பெற்றுள்ளார்.

தாபன அமைப்பு விதிகளுக்கமைவாக **திரு. எம். எஸ். எல். அலிகான்** அவர்கள் சுழற்சி முறைப்படி இளைப்பாறுகிறார் என்பதுடன் தொடர்ந்து பணியிலுள்ள பணிப்பாளர்களின் ஏகமனதான ஆதரவுடன் **அவர்** மீள் தெரிவிற்குத் தகைமை பெற்றுள்ளார்.

**2014 மார்ச் 31 இல் உள்ளவாறான பணிப்பாளர்கள்**

மீளாய்வுக்குரிய ஆண்டில் பணியாற்றிய பணிப்பாளர்களின் பெயர்கள் வருமாறு:

திரு. டி. கலன்சூரிய
திரு.ஏ.யு.எம்.யாசீர்
திருமதி.ஏ.ஆர்.விக்கிரமசிங்க
திரு.ரி.எம்.ஏ.பங்சஜயா
திரு.ஐ.எம்.ஜுனேய்ஸ்
திரு.டபிள்யூ.எம்.சீ.பி.வாசல

**திரு. எம். எஸ். எல். அலிகான்** அவர்கள் 2014 மார்ச் 14 ஆம் திகதி சபைக்கு நியமிக்கப்பட்டதுடன் அவர் கம்பனியின் பணிப்பாளராக மீள் தெரிவிற்காகத் தன்னை முன் மொழிந்துள்ளார்.

**பணிப்பாளர்களின் ஊதியம்**

ஆய்வாண்டு காலப்பகுதியில் பணிப்பாளர்கள் சபை ஊதியத்தின் மொத்தத் தொகை நிதிக் கூற்றுக்களின் **குறிப்பு 10 (1,293,998.00)** இல் தரப்படுகின்றது.

**ஓப்பந்தங்கள் மற்றும் கம்பனியின் உத்தேசிக்கப்பட்ட ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் அக்கறை**

ஓப்பந்தங்கள் மற்றும் கம்பனியின் உத்தேசிக்கப்பட்ட ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் அக்கறை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றன.

**நியதிச்சட்டக் கொடுப்பனவுகள்**

பணிப்பாளர்களின் அறிவு மற்றும் நம்பிக்கைக்கமைவாக அரசாங்கம், பணியாளர்கள் தொடர்புபட்ட அனைத்து நியதிச்சட்டக் கொடுப்பனவுகளும் உரிய திகதியில் வழங்கப்பட்டுள்ளன அல்லது கம்பனியின் புத்தகங்களில் காட்டப்பட்டுள்ளன என்பதில் அவர்கள் திருப்திகரமாக இருக்கின்றனர்.

**ஐந்தொகைத் திகதியின் பின்னரான நிகழ்வுகள்**

ஐந்தொகைக்குப் பின்னரான நிகழ்வுகளின் ஆவணங்கள் கவனத்திலெடுக்கப்பட்டுள்ளதுடன், தேவையானவிடத்து உரிய சீராக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டுள்ளன.

**கணக்காய்வாளர்கள்**

திரு செல்வி றணவீர நாகசிங்க & கம்பனிப் பட்டயக் கணக்காளர்கள் ஆய்வாண்டு காலப்பகுதியில் கணக்காய்வாளர்களாகச் சேவையாற்றியிருந்தனர். கணக்காய்வு தவிர்ந்த வேறு எத்தகைய தொடர்போ அல்லது ஆர்வமோ தமக்கு காணப்படவில்லையென்பதை கணக்காயவாளர்கள் உறுதிப்படுத்தியிருந்தனர். கணக்காய்வாளர்கள், இலங்கை பட்டயக் கணக்காய்வாளர்கள் நிறுவனத்தின் ஒழுக்க நியதிகளுக்கமைவாக தாம் சுதந்திரமாகச் செயற்பட்டதாக உறுதிப்படுத்தியிருந்தனர்.

நிதியாண்டுக்கான கணக்காய்வாளர்களுக்குச் செலுத்தவேண்டிய கட்டணம் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 11 இல் தரப்படுகின்றது.

திரு.:.செல்வி றணவீர நாகசிங்க & கம்பனி எமது அலுவலகத்தில் தொடர்ந்துமிருப்பதற்கு விருப்பம் தெரிவித்தள்ளனர். அவர்களை மீண்டும் நியமிப்பதற்கும், அவர்களது ஊதியத்தை நிறுவுவதற்கான பணிப்பாளர்களின் அதிகாரத்தையளிப்பதற்குமான தீர்மானம் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் முன்மொழியப்படவுள்ளது.


**கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்டின் சபையின் கட்டளையினால்.**

| | | |
|---|---|---|
| …………………… | …………….. | ………………………… |
| பணிப்பாளர் | பணிப்பாளர் | செயலாளர்கள்<br>எக்கவுன்டிங் சிஸ்டம்ஸ்<br>செக்ரடேரியல் சேர்விசஸ்<br>(பிறைவட்) லிமிடெட் |

# நிதிசார் வெளிப்பாடுகள்


**உற்பத்தி**

| ஆண்டு | மி.தொன் |
|---|---|
| 2008/9 | 877 |
| 2009/10 | 915 |
| 2010/11 | 771 |
| 2011/12 | 888.33 |
| 2012/13 | 1018 |
| 2013/14 | 848 |





**விற்பனை**

| ஆண்டு | மி.தொன் |
|---|---|
| 2008/9 | 497 |
| 2009/10 | 295.2 |
| 2010/11 | 760.3 |
| 2011/12 | 850.3 |
| 2012/13 | 537.8 |
| 2013/14 | 793 |





**வருவாய்**

| ஆண்டு | ரூபா.மில். |
|---|---|
| 2008/9 | 60.4 |
| 2009/10 | 21.1 |
| 2010/11 | 105.1 |
| 2011/12 | 128.2 |
| 2012/13 | 91.6 |
| 2013/14 | 144.11 |





**மொத்த இலாபம்**

| ஆண்டு | ரூபா.மில். |
|---|---|
| 2008/9 | 44.8 |
| 2009/10 | 13.1 |
| 2010/11 | 62.4 |
| 2011/12 | 74.9 |
| 2012/13 | 53.5 |
| 2013/14 | 91.36 |





**வரிக்கு முன்னரான தேறிய இலாபம்**

| ஆண்டு | ரூபா.மில். |
|---|---|
| 2008/9 | 37.3 |
| 2009/10 | 1.5 |
| 2010/11 | 37.7 |
| 2011/12 | 54.3 |
| 2012/13 | 16.4 |
| 2013/14 | 21.18 |




**தேறிய சொத்துக்கள்**

| ஆண்டு | ரூபா.மில். |
|---|---|
| 2008/9 | 4.4 |
| 2009/10 | 137.1 |
| 2010/11 | 166.2 |
| 2011/12 | 214.5 |
| 2012/13 | 423.4 |
| 2013/14 | 366.33 |



# கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்

## வருடாந்த கணக்குகள் 2013/2014

## 2013 ஏப்பிரல் முதல் 2014 மார்ச் வரை

றணவீர, நாகசிங்க & கம்பனி
பட்டயக் கணக்காளர்கள்

# கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்
# 2013/14

**பொருளடக்கம்** **பக்கம்**


| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| கம்பனி தொடர்பான விபரங்கள் | 01 |
| கணக்காய்வாளர்கள் அறிக்கை | 02 |
| வருமானக் கூற்று | 03-04 |
| ஐந்தொகை | 05 |
| உரிமைப்பங்கு மாற்றங்களின் கூற்று | 06 |
| பண ஓட்டக் கூற்று | 07 |
| முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள | 08- 15 |
| கணக்குகளுக்கான குறிப்புகள் | 16 - 26 |
| வருமான வரிக் கணிப்புகள் | 27-28 |

# கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்

## 1 கூட்டு நிறுவனத் தகவல்கள்

### கூட்டிணைப்பு பற்றிய விபரங்கள்

1987 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் அரச வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீளப்பதிவு செய்யப்பட்டது.

### வரிசை அமைச்சு

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு

### பிரதான செயற்பாடு

இயற்கையாகக் காணப்படுகின்ற திரள் வகை காரீயத்தை அகழ்ந்து, பதப்படுத்தி ஏற்றுமதி செய்தல்.

### பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்

இல. 100, 1/3, சேர் சிற்றப்பலம் ஏ.காடினர் மாவத்தை,கொழும்பு 02.

### பணிப்பாளர்கள் சபை

திரு.டி.கலன்சூரிய (தவிசாளர்)
திருமதி.ஏ.ஆர்.விக்கிரமசிங்க
திரு.ஐ.எம்.ஜுனேய்ஸ்
திரு.ரி.எம்.ஏ.பங்சஜயா
திரு.ஏ.யு.எம்.யாசீர்
திரு.எஸ்.நிஜாமுடீன் (01.07.2013 முதல் விளைபயனாகுமாறு விலகிச் சென்றார்)
திரு.டபிள்யூ.எம்.சீ.பி.வாசல (27.02.2013 முதல் விளைபயனாகுமாறு நியமிக்கப்பட்டார்)
திரு.எம்.எஸ்.எல்.அலிகான் (14.03.2014 முதல் விளைபயனாகுமாறு நியமிக்கப்பட்டார்)

### கம்பனி செயலாளர்

எக்கவுண்டிங் சிஸ்ரம்ஸ் செக்ரேறியல் சேர்விஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
இல. 02, காஸ்ரில் ஒழுங்கை,கொழும்பு 04.
தொலைபேசி: 0112505152, தொலைநகல் : 5364295

### கம்பனியின் கணக்காய்வாளர்கள்

றணவீர, நாகசிங்க & கம்பனி
பட்டயக் கணக்காளர்கள்
இல. 277, புதிய ஹுனுப்பிட்டிய வீதி, தலுகம, களனி.

றணவீர, நாகசிங்க & கம்பனி
பட்டயக் கணக்காளர்கள்

எஸ்.றணவீர,எ.சி.எ
என்.நாகசிங்க,பி.எஸ்.சி,எவ்.சி.எ
வை.றணவீர,பி.எஸ்.சி,எ.சி.எ

கொழும்பு அலுவலகம்:
இல. 277,
புதிய ஹுனுப்பிட்டிய வீதி,
டலிகம,
களனி
தொ.பேசி/தொ.நகல்:0112910571,2905196

தலைமை அலுவலகம்
இல..41/5 பி,
பழைய சந்தை வீதி,
கொட்டுவேகொடை,
மாத்தறை.
தொ.பேசி: 0412222365

# சுயாதீனக் கணக்காய்வாளரின் அறிக்கை

## கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட் அங்கத்தவர்களுக்கு

### *நிதிக்கூற்றுக்கள் மீதான அறிக்கை*

நாம், 2014 மார்ச் 31 இலுள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமைப்பங்கு மாற்றங்களின் கூற்று மற்றும் அந்த முடிவடைந்த ஆண்டுக்கான பண ஓட்டக் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கை மற்றும் ஏனைய விளக்கக் குறிப்புகளின் தொகுப்பு என்பவற்றைக் கொண்டிருக்கின்ற கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்டினது சமர்ப்பிக்கப்படுகின்ற நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்துள்ளோம்.

### *நிதிக் கூற்றுக்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பானது*

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். இந்தப் பொறுப்பு, வடிவமைப்பு, தயாரிப்பு தொடர்பான அகக்கட்டுப்பாட்டினை நடைமுறைப்படுத்துதல், பேணுதல் மற்றும் மோசடி அல்லது பிழை காரண மாகவோ ஆவணம்சார் தவறான கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களை நியாயமாகச் சமர்ப்பித்தல் உரிய கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்தலும், பிரயோகித்தலும் மற்றும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவகையில் நியாயமானதான கணக்கீட்டு மதிப்பீட்டினை மேற்கொள்ளுதல் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

### *கணக்காய்வு எல்லையும், கருத்துரையின் அடிப்படையும்*

எமது பொறுப்பு, எமது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கருத்தினைத் தெரிவிப்பதாகும். நாம், கடன் தீர்வாற்றல் குறிப்பு ஆவணம்சார் தவறான கூற்றின்றி இருக்கின்றது என்பது பற்றிய நியாயமான உத்தரவாதத்தைப் பெறுவதற்கு எம்மைத் திட்டமிட்டு செயலாற்றுவதற்குத் தேவைப்படுத்துகின்ற இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை கணக்காய்வு நடைமுறைக் கூற்றுக்களுக்கமைவாக எமது கணக்காய்வினை நடத்தியிருந்தோம். எமது கணக்காய்வு, தொகைகளின் கூற்றுக்கள் மற்றும் கடன் தீர்வாற்றல் குறிப்புகளிலுள்ள வெளிப்படுத்தல் களுக்கு ஆதரவளிக்கின்ற சான்றுகளின் பரிசீலனையின் அடிப்படையிலான பரிசோதனை மற்றும் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் பணிப்பாளர்களினால் செய்யப்பட்ட முக்கியமான மதிப்பீடுகள், கடன் தீர்வாற்றல் குறிப்பின் ஒட்டுமொத்த ஒப்படையினை மதிப்பிடுதல் மற்றும் கூறப்பட்ட நிதிக் கூற்றுக்கள் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளனவா என்று தீர்மானிப்பது என்பவற்றை உள்ளடக்குகின்றது.

எமது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் உட்பட்ட வகையில் எமது கணக்காய்வினை மேற்கொள்ளும் நோக்கிற்கு அத்தியாவசியமான சகல தகவல்களையும் , விளக்கங்களையும் பெற்றுக்கொண்டோம் ஆதலால் எமது கணக்காய்வு, எமது கருத்துரைக்கு நியாயமான அடிப்படையொன்றை வழங்குகின்றது என்று நாம் நம்புகின்றோம்.

### *கருத்துரை*

எமது கருத்துரையில், நிதிநிலைமைக்கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமைப்பங்கு மாற்றங்களின் கூற்று , பண ஓட்டக் கூற்று, கணக்கீட்டுக் கொள்கைகள், கம்பனியுடனான குறிப்புகள் நிதி நிலைமையின் உண்மையான நியாயமான பார்வையைத் தருகின்றது, இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குகின்றது மற்றும் 2014 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்காக 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட தகவல்களையும் அந்த முடிவடைந்த ஆண்டுக்கான அதனது இயக்கங்களின் விளைவுகளையும் வழங்குகின்றது.

### *கம்பனியுடனான ஒப்பந்தத்தில் பணிப்பாளர்களின் ஆர்வம்*

எமக்குக் கிடைக்கப் பெறச் செய்திருந்த தகவல்களின்படி, கணக்கின் குறிப்பு 07 இல் வெளிப்படுத்தப்பட்டவாறு, 2014 மார்ச் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டு காலப் பகுதியில் தற்போதிருக்கின்ற கம்பனியின் பணிப்பாளர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்த ஒப்பந்தங்களிலும் ஆர்வம் கொண்டிருக்கவில்லை.

### *ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குவிதித் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை*

இந்த நிதிநிலைமைக்கூற்று, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 151(2) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடனும் இணங்குகின்றது.

**பட்டயக் கணக்காளர்கள்**
**கொழும்பு.**
**19 ஆகஸ்ட் 2014**

**கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்**

**விரிவான வருமானக்கூற்று**

மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டு

| *தொகை ரூபாய்களில்* | குறிப்புக்கள் | **2014** | **2013** |
|---|---|---|---|
| **வருவாய்** | | | |
| காரிய விற்பனை | 08 | 144,111,798.15 | 91,685,689.71 |
| நேரடிச் செலவு,அகழ்வுச் செலவு | 09 | (52,750,707.80) | (36,423,588.62) |
| **மொத்த இலாபம் /(நட்டம்)** | | **91,361,090.35** | **55,262,101.09** |
| **கழிக்க: இயங்கு செலவு** | | | |
| தன்னாள் செலவு | 10 | (15,394,843.66) | (12,067,725.74) |
| தாபன , நிருவாகச் செலவு | 11 | (19,537,971.83) | (13,298,040.74) |
| பராமரிப்புச் செலவு | 12 | (1,339,248.06) | (1,130,017.81) |
| பயன்பாட்டுச் செலவு | 13 | (599,029.49) | (685,730.62) |
| தேய்மானச் செலவு | 14 | (20,167,747.60) | (6,148,360.68) |
| விற்பனை மற்றும் விநியோகச்செலவு | 15 | (3,877,278.11) | (3,574,954.66) |
| பணிக்கொடை | | (2,229,903.20) | (928,316.76) |
| **மொத்த இயங்கு செலவு** | | **(63,146,021.95)** | **(37,833,147.01)** |
| **இயங்கு இலாபம்/(நட்டம்)** | | 28,215,068.40 | 17,428,954.08 |
| நிதி மற் றும் ஏனைய செலவு | 16 | (8,473,835.17) | (2,869,703.49) |
| சில்லறை வருமானம் | 17 | 1,446,547.45 | 1,929,793.13 |
| **வரிவிதிப்பிற்கு முன்னரான இலாபம்/(நட்டம்)** | | 21,187,780.68 | 16,489,043.72 |
| வரிவிதிப்பு | | (4,581,762.69) | (852,851.15) |
| **ஆண்டுக்கான இலாபம்/(நட்டம்)** | | **16,606,017.99** | **15,636,192.57** |

## கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்

### விரிவான வருமானக்கூற்று

| மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டு<br>*தொகை ரூபாய்களில்* | றிப்புக்கள் | 2014 | 2013 |
|---|---|---|---|
| **ஏனைய விரிவான வருமானம்** | | | |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம்/நட்டம் மீதான இலாபம் | | (1,942,245.39) | (3,109,074.14) |
| ஆதனம்,பொறித்தொகுதி, உபகரணங்களின் மீள்மதிப்பீடு | | - | 197,329,460.70 |
| **ஆண்டுக்கான ஏனைய விரிவான வருமானங்கள்** | | **(1,942,245.39)** | **194,220,386.56** |
| **ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம்** | | **14,663,772.60** | **209,856,579.13** |

றணவீர, நாகசிங்க & கம்பனி
பட்டயக் கணக்காளர்கள்

எஸ்.றணவீர,எ.சி.எ
என்.நாகசிங்க,பி.எஸ்.சி,எவ்.சி.எ
வை.றணவீர,பி.எஸ்.சி,எ.சி.எ

கொழும்பு அலுவலகம்:
இல. 277,
புதிய ஹுனுப்பிட்டிய வீதி,
டலிகம,
களனி
தொ.பேசி/தொ.நகல்:0112910571,2905196

தலைமை அலுவலகம்
இல..41/5 பி,
பழைய சந்தை வீதி,
கொட்டுவேகொடை,
மாத்தறை.
தொ.பேசி: 0412222365

**கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்**

**நிதிநிலைமைக்கூற்று**

| மார்ச் 31 இலுள்ளவாறு<br>தொகை ரூபாய்களில் | குறிப்புகள் | **2014** | **2013** |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறைச்சொத்துக்கள் அல்லாதவை** | | | |
| ஆதனம்,பொறித் தொகுதியும் உபகரணமும | 18 | 267,234,317.20 | 256,076,582.10 |
| நிலையானவைப்புகள் ஐ.அ.நா | | - | 27,723,833.78 |
| பணிக்கொடை முதலீட்டு நிதியம் | | 5,675,000.00 | 5,000,000.00 |
| | | **272,909,317.20** | **288,800,415.88** |
| **நடைமுறைச்சொத்துக்கள்** | | | |
| கையிருப்பு | 19 | 105,267,315.56 | 135,514,956.19 |
| கடன்படுநர்கள், வைப்புகளும் பெறுகைகளும | 20 | 9,889,269.61 | 28,056,138.55 |
| பணமும், பணத்திற்கு சமனானவையும் | 21 | 13,800,259.29 | 11,709,454.63 |
| | | **128,956,844.46** | **175,280,549.37** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **401,866,161.66** | **464,080,965.25** |
| **உரிமைப்பங்கு மற்றும் பொறுப்புக்கள்** | | | |
| **மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்** | | | |
| தெரிவிக்கப்பட்ட மூலதனம் | 22 | 13,000,000.00 | 13,000,000.00 |
| வைத்திருக்கப்படும் வருவாய்கள் | | 103,442,157.99 | 160,276,371.37 |
| ஒதுக்கங்கள | 23 | 250,220,462.70 | 250,220,462.70 |
| | | **366,662,620.69** | **423,496,834.07** |
| **நீண்ட காலப் பொறுப்புகள்** | | | |
| தவணைக்கடன்கள் | 24 | - | 2,500,000.00 |
| குத்தகை தருமதியாளர்கள் | 25 | 3,662,917.77 | 6,016,747.41 |
| பணிக்கொடைக் கொடுப்பனவிற்கான எற்பாடு | | 6,003,227.56 | 4,688,320.36 |
| | | **9,666,145.33** | **13,205,067.77** |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| குத்தகை தருமதியாளர்கள் | 25 | 2,353,829.64 | 3,298,799.34 |
| வியாபாரமும் ஏனைய கடன் தருநர்களும் | 26 | | 1,337,448.25 |
| பங்கிலாபக் கொடுப்பனவு | 27 | 954,196.07 | 3,702,986.65 |
| வரிக்கான ஏற்பாடு | 28 | | 12,376,561.15 |
| உறப்பட்ட கட்டணங்கள் | 29 | 6,700,382.20 | 6,663,268.02 |
| | | **25,537,395.64** | **27,379,063.41** |
| **மொத்தத் தேறுமதி மற்றும் பொறுப்புக்கள்** | | **401,866,161.66** | **464,080,965.25** |

நிதிக் கூற்றுக்கள் , 2007 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கும் வகையில தயாரிக்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

பிரதம நிதி அலுவலர்

சபை சார்பில் ஒப்பமிடப்பட்டுள்ளது இந்த நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கு பணிப்பாளர்கள் சபையே பொறுப்புவாய்ந்தது.

.........................  .........................................
பணிப்பாளர்  பணிப்பாளர்

# கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்

## உரிமைப்பங்கு மாற்றங்களின் கூற்று

### மார்ச் 31 இலுள்ளவாறு

| *தொகை ரூபாய்களில்* | மூலதனப் பங்கு | மீள் மதிப்பீட்டு ஒதுக்கங்கள் | திரட்டியஇலபாம் (நட்டம்) | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2012 மார்ச் 01 இல் மீதி | 13,000,000.00 | 39,784,286.00 | 147,749,389.44 | 200,533,675.44 |
| ஆண்டுக்கான இலாபம் / (நட்டம்) | - | - | 15,636,192.57 | 15,636,192.57 |
| முன்னைய ஆண்டு சீராக்கம் | - | - | (136.50) | (136.50) |
| ஆண்டுக்கான ஏனைய விரிவான வருமானங்கள் | | 197,329,460.70 | (3,109,074.14) | 194,220,386.56 |
| 2013 மார்ச் 31 இல் மீதி | **13,000,000.00** | **237,113,746.70** | **160,276,371.37** | **410,390,118.07** |
| 2013 ஏப்ரல் 01 இல் மீதி | 13,000,000.00 | 237,113,746.70 | 160,276,371.37 | 410,390,118.07 |
| முன்னைய ஆண்டு சீராக்கம் | | | (70,437,768.12) | (70,437,768.12) |
| ஆண்டுக்கான இலாபம் / (நட்டம்) | - | - | 16,606,017.99 | 16,606,017.99 |
| 2013 பங்கிலாபப் பிரகடனம் | - | - | (1,060,217.86) | (1,060,217.86) |
| ஆண்டுக்கான ஏனைய விரிவான வருமானங்கள் | | - | (1,942,245.39) | (1,942,245.39) |
| **2014 மார்ச் 31 இல் மீதி** | **13,000,000.00** | **237,113,746.70** | **103,442,157.99** | **353,555,904.69** |

| | |
|---|---|
| முன்னைய ஆண்டு சீராக்கம் | (66,396,403.67) |
| கையிருப்புச்சீராக்கத்திலிருந்து எழுபவை | (4,041,364.45) |
| ஏற்பாட்டின் கீழுள்ள வருமானவரி | (70,437,768.12) |

## கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்

## பண ஓட்டக் கூற்று

| **மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டு** *தொகை ரூபாய்களில்* | **2014** | **2013** |
|---|---|---|
| **இயங்கு செயற்பாடுகளிலிருந்தான / (பயன்படுத்திய) பண ஓட்டம்** | | |
| வருமான வரிச் செலவினங்களுக்கு முன்னரான தேறிய இலாபம் / (நட்டம்) | 21,187,781 | 16,489,044 |
| சீராக்கல் : | | |
| பணிக்கொடை ஏற்பாடு | 2,229,903 | 928,317 |
| குத்தகை வட்டி | - | 853,495 |
| முன்னைய ஆண்டுச்சீரக்கம் | (66,396,404) | - |
| தொட்டுணரக்கூடிய நிலையான சொத்துக்களின் மீதான தேய்மானம் | 20,167,748 | 7,785,785 |
| நாணயமாற்று நட்டங்கள் | (1,942,245) | (3,109,074) |
| தொழிற்படு மூலதன மாற்றங்களின் முன்னர் இயங்கு இலாபம் | (24,753,218) | 22,947,566 |
| இருப்புகளில் (அதிகரிப்பு) / குறைவு | 30,247,641 | (28,535,571) |
| பெறுகைகளில் (அதிகரிப்பு) / குறைவு | 18,166,869 | (2,061,377) |
| கடன்தருநர்களில் (அதிகரிப்பு) / குறைவு | (418,382) | 836,487 |
| சேர்வுகளில் (அதிகரிப்பு) / குறைவு | 37,114 | 1,446,001 |
| **இயங்கு செயற்பாடுகளிலிருந்தான/(பயன்படுத்திய) தேறிய பண ஓட்டம்** | **48,033,241** | **(28,314,460)** |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான/(பயன்படுத்திய) பண ஓட்டம்** | | |
| தொட்டுணரக்கூடிய நிலையான ஆதனங்களின் கொள்வனவு | (31,325,483) | (14,084,009) |
| நிலையான வைப்பு | 27,723,834 | 30,035,142 |
| பணிக்கொடை முதலீட்டு நிதியம் | (675,000) | (5,000,000) |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான/(பயன்படுத்திய) தேறிய பண ஓட்டம்** | **(4,276,649)** | **10,951,133** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான/(பயன்படுத்திய) பண ஓட்டம்** | | |
| வங்கிக் கடன் கொடுப்பனவு | (2,500,000) | (6,000,000) |
| செலுத்தப்பட்ட வருமானவரி | (6,495,788) | - |
| செலுத்தப்பட்ட பங்கிலாப வரி | (3,702,987) | - |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | (914,996) | (92,432) |
| குத்தகைக் கொடுப்பனவு | (3,298,799) | (3,970,176) |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான/(பயன்படுத்திய) தேறிய பண ஓட்டம்** | **(16,912,570)** | **(10,062,608)** |
| **பணமும் பணத்திற்குச் சமமானவையில் அதிகரிப்பு / (குறைவு)** | 2,090,805 | (4,478,368) |
| ஆண்டின் ஆரம்பித்தல் பணமும் பணத்திற்குச் சமமானவையும் | 11,709,455 | 16,187,823 |
| **ஆண்டின் இறுதியில் பணமும் பணத்திற்குச் சமமானவையும்** | **13,800,259** | **11,709,455** |
| **பணமும் பணத்திற்குச் சமமானவையும்** | | |
| இலங்கை வங்கி -ரிதீகம | 188,365 | 1,318,828 |
| இலங்கை வங்கி -கொள்ளுப்பிட்டிய | 36,788 | 958,589 |
| டி.எவ்.சி.\$. இலங்கை வங்கி கொள்ளுப்பிட்டிய | 13,541,287 | 9,416,114 |
| சில்லறைக் காசு தலைமை அலுவலகம் | 23,399 | 3,792 |
| சில்லறைக் காசு-அகழ்வு அலுவலகம் | 10,420 | 12,132 |
| | **13,800,259** | **11,709,455** |

# கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்

**2014 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களின் குறிப்புகள்.**

## 1. பொதுத் தகவல்கள்

கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட் ஆனது முன்னதாக மக்கள்மயப்படுத்தப்பட்ட கம்பனியாகக் காணப்பட்டதுடன் 1996 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க பொது தொழில் முயற்சிகள் சட்டத்தின் புனர்நிருமாணத்தின் கீழ் அரசாங்கத்திடம் 1997 ஆம் ஆண்டில் மீளவும் உரித்தளிக்கப்பட்டது. தற்போது இது பூரணமாக அரசாங்கத்தின் சொந்த வியாபார முயற்சியாக தொழிற்படுகின்றது.

ஆய்வாண்டு காலப்பகுதியில், கம்பனியின் முதன்மையான செயற்பாடு காரீயத்தை அகழ்தல் மற்றும் ஏற்றுமதி, உள்நாட்டுச் சந்தைகளில் விற்பனை செய்தல் என்பவையாகும்.

கஹட்டகஹ கிறபைட் லங்கா லிமிடெட்டின் 2013 ஏப்பிரல் 1 ஆம் திகதி முதல் 2014 மார்ச் 31 ம் திகதி வரையான ஆண்டுக்குரிய நிதிக்கூற்றுக்கள், பணிப்பாளர்கள் சபையின் 2014 ஆகஸ்ட் 19 ம் திகதியிலான தீர்மானத்திற்கமைவாக விநியோகத்திற்காக அதிகாரமளிக்கப்பட்டுள்ளன.

## 2. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கையின் பொழிப்பு

நிதிக்கூற்றைத் தயாரித்த போது பிரயோகிக்கப்பட்ட பிரதான கணக்கீட்டுக் கொள்கைகள் பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது. குறித்துரைக்கப்படாதவிடத்து எப்போதும் முன்வைக்கப்பட்டுள்ள சகல வருடங்களுக்கும் தொடர்ந்தேச்சியாக இக்கொள்கைகள் பிரயோகிக்கப்பட்டுள்ளது.

### 2.1 தயாரிப்பிற்கான அடிப்படை

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட SLFRS மற்றும் LKAS ஐ உள்ளடக்கிய (இதனகத்து "SLFRS") இலங்கை கணக்கியல் நியமங்களிற்கமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன.

2013 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டை உள்ளடக்கியதாக மற்றும் அது கால வரையான சகல காலப்பகுதிகளுக்குமான நிதியியல் கூற்றுக்களை கம்பனியானது முன்னைய SLASs நியமங்களுக்கு அமைவாகவே தயாரித்தது.

முதன் முறையாக SLFRS நியதிகளுக்கமைவாக தயாரிக்கப்பட்டுள்ள இக்கூற்றுத்தெகுதியானது 01 ஏப்ரல் 2011 ஆம் திகதி அல்லது அதற்குப்பின் ஆரம்பிக்கும் காலப்பகுதிகளுக்கு விளைபயனாகும் வகையில் 31 மார்ச் 2014 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களாக தயாரிக்கப்படடுள்ளது.

கம்பனியானது அதன் SLFRS இற்கு அமைவான ஆரம்ப நிதிநிலைமைக்கூற்றினை தயாரிக்கும் போது 2011 ஏப்ரல் 01 ம் திகதி முதல் ஆரம்பிக்கும் சகல காலப்பகுதிகளுக்கும் 2011 ஏப்ரல் 01 ம் திகதியிலிருந்தே குறித்த நியமங்கள் அமுலிலிருந்ததாகக்கொண்டு தெரடர்ந்தேர்ச்சியாக அந்நியமங்களை பிரயோகித்தே தயாரித்துள்ளது.

இலங்கை ரூபாவில் தயாரிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள், வரலாறு சார் செலவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. வருவாய் மீதான செலவின விடயங்களை ஒப்படைத்தலில் சேர் அடிப்படை பின்பற்றப்பட்டுள்ளது.
முன்னைய வருடங்களுக்கான புள்ளிவிபரங்களும் தரவுகளும் இவ்வருட முன்வைப்புடன் இணங்குமாறு மீள ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

## 2.2 இணக்கக் கூற்று

2014 மார்ச் 31 இலுள்ளவாறான மற்றும் அப்போது முடிவடைந்த ஆண்டுக்கான நிதிநிலைமைக்கூற்று, மொத்த விரிவான வருவாய்க்கூற்று, உரிமைப் பங்கு மாற்றங்களின் கூற்று , பண ஓட்டக்கூற்று என்பவற்றுடன் இணைந்து கணக்கீட்டுக் கொள்கை மற்றும் கம்பனியின் குறிப்புகள் என்பன இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் காணக்கிடைக்கின்ற பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு நியமங்களுக்கமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. பணவீக்க காரணிகளுக்காக சீராக்கல்கள் செய்யப்படவில்லை.

## 2.3 நிதி ஆண்டு

கம்பனி 31 மார்ச் மாதத்தில் முடிவடைகின்ற நிதி ஆண்டினைக் கொண்டிருக்கின்றது.

## 2.4 நடைபெறுகின்ற அலுவல்கள்

கம்பனிக்கான அரசாங்கத்தின் கொள்கையை, நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள் சபையின் கீழ் நடைபெறுகின்ற அலுவல்களைத் தொடர்வதற்கும், இது பொறுப்பேற்கப்பட்டதிலிருந்து தொழிற்பாடுகளைத் திரவத்தன்மையாக்குவதற்கோ அல்லது நிறுத்துவதற்கோ உத்தேசமில்லை.

## 2.5 வரிவிதிப்பு

**நடைமுறை வரி**

வருமான வரிக்கான ஏற்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் தெரிவிக்கப்பட்டவாறு வருமானம் மற்றும் செலவினங்களில் ஆக்கக்கூறுகளினால் அமைந்துள்ளதுடன், 2006 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க உள்நாட்டு வருமானச் சட்டத்தினதும், அச்சட்டத்தின் தொடர்ச்சியான திருத்தங்களின் ஏற்பாடுகளுக்கமைவாக கணிக்கப்படுகின்றன.

புவிச் சரிதவியல் அளவைச் சுரங்கப்பணியகத்திற்கான அரச கொடுப்பனவுகள் மீது நிறுத்திவைத்தல் வரி கழிக்கப்படவில்லை.

***பிற்போடப்பட்ட வரி***

அறிக்கையிடும் தினத்தில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதான வரி அடிப்படைகளுக்கும் நிதிக்கூற்று சார் அறிக்கையிடும் நோக்கங்களுக்கான அவற்றின் காவுகைத் தொகைகளுக்கும் இடையில் எழும் தற்காலிக வித்தியாசங்கள் மீது பிற்போடப்பட்ட வரி வழங்கப்படமாட்டாது.

1 ஏப்ரல் 2013 ம் திகதியிலான பிரதான கையிருப்பு மூலப்பொருளின் மதிப்பிறக்கம் செலுத்தப்படக்கூடிய நடைமுறை வருமானவரிக்கணிப்புக்களின் போது கருத்திற்கொள்ளப்படவில்லை.

## 2.6 கையிருப்புகள் (கணக்கிலுள்ள குறிப்பு 19)

**காரீயம்**

கையிருப்பு மதிப்பீடு, வருமானக் கூற்றின் குறிப்பு 09 இன் கீழ் காட்டப்பட்ட உறப்பட்ட மொத்த அகழ்வுச் செலவின் அடிப்படையில் அமைந்திருக்கின்றது. கையிருப்பு மதிப்பீட்டுப்பதிவுகள் தொகை, வீதம் மற்றும் மதிப்பீட்டினைக் கொண்டிருக்கின்றது.

எமக்குக் கிடைக்கப் பெறச்செய்யப்பட்ட தகவல்களின்படி, கையிருப்பு மதிப்பீடு கீழே காட்டப்பட்டுள்ளவாறு அமைந்துள்ளது:-

| | **தொகை (மெ.தொ)** | **பெறுமதி (இலங்கை.ரூபா)** |
|---|---|---|
| 2013 ஏப்பிரல் 01 இல் கையிருப்பு | 1,843.68 | 121,764,354.37 |
| மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கையிருப்பு | (1,005.33) | (66,396,403.67) |
| கணக்கின் படி மீதி | 838.35 | 55,367,950.70 |
| வருடத்தில் அகழப்பட்டது | 848.14 | 80,473,100.42 |
| வருடத்தில் ஏற்றுமதி செய்யப்பட்டது | (793.50) | (52,406,065.69) |
| 2014 மார்ச் 31 இல் கையிருப்பு | 892.99 | 83,435,985.43 |

தொன்னொன்றிற்கான சராசரிச் செலவு (83,435,985.43/892.99) 93,433.28

**நுகரக்கூடியவை**

இது, காரீயம் தவிர்ந்த அகழ்வுச் செயன்முறையிலும், ஏனைய பராமரிப்பு வேலையிலும் நுகரக் கூடிய பொருட்களை உள்ளடக்குகின்றது. கிடைக்கப்பெறுகின்ற தகவலின்படி பொருட்களின் மொத்த எண்ணிக்கை 1,500 இனை விஞ்சுவதுடன், தற்போதிருக்கின்ற கையிருப்புக் கட்டுப்பாட்டுப் பதிவுகளுக்கான மென்பொருள் முறைமை மற்றும் பதிவுகள், முழுமையான மீளாய்வு மற்றும் நாளது வரைப்படுத்தல்களுக்குள்ளாகியிருந்தன.

சரக்கிறுப்புக்களை அவை தற்போது காணப்படும் இடத்திற்கும் , நிலைக்கும் கொண்டுவருவதற்கான உற்ற செலவுகள் பின்வரும் சூத்திரத்தை அடிப்படையாகக்கொண்டு கணிக்கப்பட்டது.

காரீயம் - மொத்த உற்ற மெய் அகழ்வுச் செலவுகளின் படி

நுகரக்கூடியவை - மெய்ச் செலவின் மீதான நிறையேற்றப்பட்ட சராசரியியனடிப்படையில்

## 2.7 ஆதனம்,பொறித் தொகுதியும் உபகரணமும் (கணக்கிலுள்ள குறிப்பு 18)

### 2.7.1 செலவு /பெறுமதி

**ஆதனம், பொறித் தொகுதியும் உபகரணமும்**

ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பன ஆரம்பத்தில் திரண்ட பெறுமானத் தேய்வு மற்றும் திரண்ட பெறுமதி இழப்பு நட்டங்கள் ஆகியவை இருப்பின், கழிக்கப்பட்டு செலவில் குறிக்கப்படும். இனங்காணல் நிபந்தனைகளை பூர்த்தி செய்யுமிடத்து அவ்வாறான செலவினம் சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள் ஆகியவற்றின் உதிரிப்பாகங்களைப் பதிலீடு செய்வதற்கான செலவினைக் கொண்டுள்ளது. ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் முக்கியமான உதிரிப்பாகங்களை இடைக்கிடையே பதிலீடு செய்வதற்கு அவசியமாகும் போது, தாபனம் அவ்வாறான உதிரிப் பாகங்களை குறிப்பிடப்பட்ட பயன்மிகு ஆயுட்காலம் மற்றும் பெறுமானத் தேய்வு ஆகியவற்றைக் கொண்ட தனிப்பட்ட சொத்துக்களாக இனங்காணும். அவ்வாறே, பெரும் சோதனைகள் செய்யப்படுமிடத்து இனங்காணல் நிபந்தனைகளை திருப்தி செய்யும் போது அதற்கான செலவினம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் காவும் தொகையில் பிரதியீடாக இனங்காணப்பட்டுள்ளது. ஏனைய எல்லா பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புச் செலவுகள் விபரமான வருமானக் கூற்றில் உற்றவையாக இனங்காணப்படும்.

சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள் ஆகியவற்றின் ஏதேனும் ஓர் உருப்படியினைப் பயன்படுத்துவதால் அல்லது அழிப்பதால் எதிர்காலத்தில் எவ்விதப் பயனும் கிடைக்காது என எதிர்பார்க்கப்பட்டால் அல்லது அது அழிக்கப்பட்டால் அவ்வுருப்படியினை இனங்காண்பது நிறுத்தப்படும். சொத்து இனங்காணப்படாமையினால் எழக்கூடிய ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் (சொத்தின் காவுகைத் தொகைக்கும் தேறிய அழிப்புச்செயன்முறைக்கும் இடையிலான வித்தியாசமாக கணிக்கப்பப்பட்டது) அச்சொத்து இனங்காணப்படாத ஆண்டில் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படும்.

சொத்தின் மீதிப் பெறுமானங்கள், பயன்மிகு ஆயுட்காலம், பெறுமானத் தேய்வு முறைமைகள் என்பன ஒவ்வொரு நிதியாண்டு இறுதியிலும் மீளாய்வுக்ககுற்படுத்தப்படுவதுடன் பொருத்தமெனில் திருத்தப்படும்.

அறிக்கையிடும் தினதின் போது பூர்த்திசெய்யப்படாத நிலையான சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மூலதனச் செலவினம் முடிவுறாத மூலதன வேலை எனக் காட்டப்பட்டு, செலவில் குறிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்டபின், குறிப்பிட்ட சொத்துக்கள் ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றுக்கு மாற்றப்படும். முடிவுறாத மூலதன வேலை மீதான பெறுமானத் தேய்வு அச்சொத்துக்கள் எதிர்பார்க்கப்பட்ட பயன்பாட்டிற்காக தயாராக இருக்கும் போது நிகழும்.

**ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் நியாயமான பெறுமதி**

தாபனம் அதன் ஆதனத்தினை வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ள நியாயமான பெறுமதியில் உள்ள மாற்றங்களுடன், நியாயமான பெறுமதியில் கையாளும். மேலும், அது பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை ஏனைய விபரமான வருமானத்தில் இனங்காணப்பட்டுள்ள நியாயமான பெறுமதியில் மாற்றங்களுடன் மீள்மதிப்பிடப்பட்ட தொகைகளில் அளவிடும். தாபனம் அவ்வாறான சொத்துக்களின் நியாயமான பெறுமதியினை 2013 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அளவிடுவதற்கு சுயாதீனமான மதிப்பீட்டு நிபுணர் ஒருவரை ஈடுபடுத்தியது. ஆதனத்தின் இயல்பு, இடம் மற்றும் நிலைமை போன்ற குறிப்பிட்ட சந்தைக் காரணிகளுக்கு சரிப்படுத்தப்பட்ட ஒப்பிடக்கூடிய விலைகளைப் பயன்படுத்தி சந்தை அடிப்படையிலான ஆதாரங்களை மேற்கோளாகக் கொண்டு சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள் மதிப்பிடப்பட்டன.

**நிதிசாரா சொத்துக்களின் பெறுமதி இழப்பு**

நிறுவனம் அறிக்கையிடும் தினத்தில் சொத்தொன்றில் பெறுமதி இழப்பு ஏற்படுவதற்கான அறிகுறி உள்ளதா என மதிப்பீடு செய்யும். ஏதெனும் அறிகுறி காணப்பட்டால், அல்லது ஒரு சொத்திற்கான வருடாந்த பெறுமதி இழப்பு பரிசோதனை தேவைப்படும் போது, நிறுவனம் சொத்திற்கான மீளப் பெறத்தக்க தொகையினை மதிப்பீடு செய்யும். ஒரு சொத்தின் மீளப் பெறத்தக்க பெறுமதியானது விற்பனைக்குரிய செலவுகளைக் கழித்து, சொத்தின் நியாயமான பெறுமதி மற்றும் பயன்பாட்டிலுள்ள அதன் பெறுமதியை விட உயர்வாக இருக்கும். ஏனைய சொத்துக்கள் அல்லது சொத்துக்களின் தொகுதிகளிலிருந்தும் பெருமளவில் சுயாதீனமாக உள்ள காசு உட்பாய்ச்சல்களை சொத்து உருவாக்காதிருந்தாலன்றி, அது தனிப்பட்ட சொத்தொன்றாகத் தீர்மானிக்கப்படும். சொத்தொன்றின் மீளப் பெறத்தக்க தொகையை விட அதன் காவுகைத் தொகை அதிகரிக்கும் போது, அச்சொத்து பெறுமதி இழந்ததாகக் கருதப்படுவதுடன், அதன் மீளப் பெறத்தக்க தொகைக்கு குறைத்து எழுதப்படும்.

மீளாய்வாண்டின் போது, ஒரு தாபனம் அதன் சொத்துக்களை மீளப் பெறத்தக்க தொகையை விட குறைவாகக்காவுகின்றமையை உறுதிசெய்வதற்கு பயன்படுத்தும் வழிமுறைகளைக் குறிக்கும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 36 (LKAS 36) இற்கு விளைபயனை ஏற்படுத்தவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

### 2.7.2 தேய்மானம் / தவணை முறை நீக்கம்

தேய்மானத்திற்கான ஏற்பாடு, நேர்கோட்டு முறைமைப்படி சமமான தவணை முறையினால் பயனுள்ள வாழ்க்கை மீது அத்தகைய தொகைகளைப் பதிவழிப்புச் செய்யும் நோக்கில் சகல சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தினதும் செலவு மற்றும் மதிப்பீட்டின் மீது கணிக்கப்படுகின்றது.

வருட ஆரம்பத்தில் கம்பனி அதன் சகல சொத்துக்களையும் மீள்மதிப்பீடு செய்து சொத்துக்களின் எஞ்சியுள்ள பயனுள்ள வாழ்க்கைக்காலத்திற்கேற்ப கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு புதிய தேய்மான வீதங்களை அறிமுகம் செய்தது.

| | |
|---|---|
| கட்டிடம் | 3% |
| பொறித்தொகுதியும் இயந்திரமும் | 10% |
| இலத்திரனியல் உபகரணம் | 20% |
| மோட்டார் வாகனங்கள் | 10% |
| ஏனைய சொத்துக்கள் | 10% |
| அலுவலக உபகரணம் | 20% |
| மின்பிறப்பாக்கி | 8% |
| சுரங்க உபகரணங்கள் | 10% |
| தளபாடங்களும் பொருத்துக்களும் | 20 % |
| தலைமை அலுவலக இடைத்தடுப்பிடல் | 20% |

### 2.8 குத்தகைச் சொத்துக்கள்

தாபனத்திற்கு கணிசமான அளவில் மாற்றஞ் செய்யப்பட்ட நிதிக் குத்தகைகள் நிதிக்குத்தகையிடப்பட்ட உருப்படியின் உரிமையாளருக்கு நிகழத்தக்க ஆபத்துக்களும் நன்மைகளும் குத்தகையின் ஆரம்பத்தில் குத்தகையிடப்பட்ட ஆதனத்தின் நியாயமான பெறுமதியுடன் அல்லது குறைவாகக்காணப்படுமிடத்து இழிவுக்குத்தகைக் கொடுப்பனவுகளுடன் சேர்க்கப்பட்டது. பொறுப்புக்களின் எஞ்சியிருக்கும் மீதிக்கான தொடர்ச்சியான வட்டி வீதத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு குத்தகைக் கொடுப்பனவுகள் நிதிக் கட்டணங்களுக்கும் குத்தகைப் பொறுப்புக்கழிவுகளுக்கும் இடையில் பங்கீடு செய்யப்படும். நிதிக் கட்டணங்கள் வருமானக் கூற்றில் நிதிச் செலவுகளில் இனங்காணப்படும்.

குத்தகைக்கு விடப்பட்ட சொத்து, சொத்தின் பயன்மிகு ஆயுட்காலம் முழுதும் குறை மதிப்பீடு செய்யப்படும். எவ்வாறெனினும், குத்தகைத் தவணையின் இறுதியாகையில் குழு உடைமையுரிமையினைப் பெற்றுக்கொள்ளும் என்ற நியாயமான உறுதிப்பாடு இல்லாவிடின், சொத்தின் மதிப்பிடப்பட்ட குறைவான பயன்மிகு ஆயுட்காலம் மற்றும் குத்தகைத் தவணை முழுதும் குறை மதிப்பீடு செய்யப்படும்.

குத்தகைக் கொடுப்பனவுகள் தொழிற்பாடு குத்தகைத் தவணை முழுதும் நேர்-கோட்டு முறைமையின் அடிப்படையில் வருமானக் கூற்றில் தொழிற்பாட்டு செலவினமாக இனங்காணப்படும்.

## 2.9 நிதிச் சொத்துக்கள்

### 2.9.1 கடன்கள் மற்றும் வருமதிகள்

கடன்கள் மற்றும் வருமதிகள் என்பன நிரந்தரமான அல்லது உறுதியான கொடுப்பனவுகளுடனான செயற்படு சந்தையில் பட்டியலிடப்படாத மரபு சாரா நிதிச் சொத்துக்களாகும். அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதிக்கு பின்னரான 12 மாதங்களை விடக் கூடிய முதிர்ச்சிகளைத் தவிர, அவை நடைமுறைச் சொத்துக்களுக்குள் உள்ளடக்கப்படுகின்றன.

12 மாதங்களை விடக் கூடிய முதிர்ச்சியையுடைய கடன்கள் மற்றும் வருமதிகள் என்பன நடைமுறைச் சொத்துக்கள் அல்லாதவை என வகைப்படுத்தப்பட்டுள்ளது. நிதி நிலைமைக் கூற்றில தாபனத்தின் கடன்கள் மற்றும் வருமதிகளில் "வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள், காசும் காசுக்கு சமமானவையும்" என்பன உள்ளடங்குகின்றன.

### 2.9.2 நிதிசார் பொறுப்புக்கள்

தாபனத்தின் நிதிசார் பொறுப்புக்களில் வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள், வங்கிக் கடன்கள், கடன் பெறுகைகள் என்பன அடங்குகின்றன. ஆரம்பத்தில் எல்லா நிதிசார் பொறுப்புக்களும் நியாயமான பெறுமதியில் இனங்காணப்படுவதுடன், பின்னர், கழிவீடு செய்வதன் பயன் முக்கியமற்றதாக இருந்தாலன்றி, அவை பயன்தரு வட்டி முறைமையினைப் பயன்படுத்தி, தவணை முறை கடன் நீக்கச் செலவில் அளவிடப்படும் இல்லாதவிடத்து செலவினத்தில் குறிப்பிடப்படப்படும்.

## 2.10 கடன் பெறுநர்கள், வைப்புகள் மற்றும் பெறுகைகள் (கணக்கிலுள்ள குறிப்பு 20)

வர்த்தக வருமதிகளாவன சாதாரண வர்த்தக நடவடிக்கைகளில் விற்கப்பட்ட பொருட்களுக்கான வாடிக்கையாளரிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகையாகும். ஒரு வருடத்தில் அல்லது அதற்கு குறைவான காலத்தில் (அல்லது நீண்ட காலமெனின் வர்த்தக நடவடிக்கைகளின் சாதாரண தொழிற்படு வட்டத்தில்) சேகரித்தல் எதிர்பார்க்கப்படுமெனின், அவை நடைமுறைச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படும். அவ்வாறில்லாவிடின், அவை நடைமுறை சொத்துக்கள் அல்லாதவையாகக் குறிக்கப்படும்.

வர்த்தக வருமதிகள் ஆரம்பத்தில் நியாயமான பெறுமதியில் இனங்காணப்படுவதுடன், பின்னர் பெறுமதி இழப்பிற்கான ஏற்பாடுகளைக் கழித்து பயன்தரு வட்டி முறைமையினைப் பயன்படுத்திக் தவணை முறை நீக்கச் செலவில் அளவிடப்படும்.

## 2.11 வெளிநாட்டு நாணய மாற்றம்

நிறுவனத்தின் புழக்கத்தில் இருக்கும் மற்றும் சமர்ப்பித்தலுக்கு பயன்படுத்தும் நாணயமான இலங்கை ரூபாயைப் (LKR) பயன்படுத்தி நிதி அறிக்கை முன்வைக்கப்படுகின்றது.

வெளிநாட்டு நாணயத்தினைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் கொடுக்கல் வாங்கல்களை, இனங்காணலிற்கான முதலில் தகுதிபெறும் கொடுக்கல் வாங்கல் திகதியில் காணப்படும், அத்தருணத்தில் புழக்கத்தில் உள்ள செலாவணி வீதத்தில் நிறுவனம் பதிவுசெய்து கொள்ளும்.

வெளிநாட்டு நாணயத்தில் குறிக்கப்பட்ட நாணயம் சார் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அறிக்கையிடும் தினத்தில் காணப்படும் செலாவணியின் புழக்கத்திலுள்ள நாணய வீதத்தில் மீள மாற்றப்படும். நாணயம் சார் உருப்படிகளின் தீர்வு அல்லது மாற்றத்தின் போது எழும் வித்தியாசங்கள் இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படும்.

வெளிநாட்டு நாணயத்தில் வரலாற்று ரீதியான செலவின் அடிப்படையில் அளவிடப்பட்ட நாணயமல்லா உருப்படிகள் ஆரம்ப கொடுக்கல் வாங்கல் தினத்தில் உள்ளவாறான செலாவணி வீதத்தினைப் பயன்படுத்தி மாற்றப்படும். வெளிநாட்டு நாணயத்தில் நியாயமான பெறுமதியில் அளவிடப்பட்ட நாணயமல்லா உருப்படிகள் நியாயமான பெறுமதி முடிவு செய்யப்பட்ட தினத்தில் உள்ள செலாவணி வீதத்தினைப் பயன்படுத்தி மாற்றப்படும்.

நியாயமான பெறுமதியில் அளவிடப்பட்ட நாணயமல்லாதவையின் மாற்றலினால் எழக்கூடிய இலாபம் அல்லது நட்டம், உருப்படியின் நியாயமான பெறுமதியில் உள்ள மாற்றத்தின் மீதான இலாபம் அல்லது நட்டத்தினை இனங்காணலுக்கு இணைவாகக் கருதப்படும். (அதாவது, ஏனைய விபரமான வருமானத்தில் (OCI) அல்லது இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்பட்ட நியாயமான பெறுமதி இலாபம் அல்லது நட்டம் கொண்ட உருப்படிகள் மீதான மாற்றல் வித்தியாசங்கள் முறையே மூஊஜ அல்லது இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படும்.) எவ்வாறெனினும் இவ்வாண்டின் போது நாணயம் சார் உருப்படி அல்லாது நாணயமல்லா உருப்படியிலிருந்து எழும் செலாவணி இலாபம் மற்றும் நட்டம் ஏதும் இல்லை.

### 2.12 பணியாளர் நன்மைகள்

**(அ) விபரிக்கப்பட்ட நன்மைகள்**

மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில் பணிக்கொடை மதிப்பீட்டு முறையினை தெரிவிக்கின்ற எல்.கே.ஏ.எஸ். 19 உடன் இணங்குவதற்கு கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) விபரிக்கப்பட்ட உதவு தொகைகள்**

கம்பனியின் அனைத்துப் பணியாளர்களும் உரித்தான நியதிச்சட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் ஏற்புடையதாக ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியில் இணைவதற்குத் தகைமையுடையோராவர். கம்பனியானது பணியாளரின் அடிப்படை அல்லது திரட்டிய சம்பளத்தின், வேதனத்தின் 12% மற்றும் 3% ஐ ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிக்கு செலுத்துகிறது.

**(இ) குறுங்கால ஊழியர் நலன்கள்**

வருடத்தில் நிறுவனத்தின் ஊழியர்களால் வழங்கப்படும் சேவைகளுக்கான படிகள், சம்பளங்கள், வருடாந்த விடுமுறை மற்றும் சுகயீன விடுமுறை, மிகை ஊதியங்கள், நாணயமல்லா நலன்கள் என்பன சேர்க்கப்பட்டுள்ளன.

## 3. புரள்வு, வருவாய் மற்றும் செலவினம்

### 3.1 வருவாய் அங்கீகாரம்

வருவாயானது தாபனத்திற்கு பொருளாதார பயன்கள் உட்பாயும் சாத்தியமான நிலைமை என இனங்காணப்பட்டுள்ளதுடன், கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகையில் வருவாய் நம்பகமான முறையில் அறவிடப்படக் கூடியதாகவும் உள்ளது. LKAS 18 இன் படி வரிகள் அல்லது தீர்வை அகற்றப்பட்டு, கொடுப்பனவின் ஒப்பந்த ரீதியான குறிப்பிட்ட நிபந்தனைகளைக் கவனத்திற் கொண்டு, கிடைத்தவை அல்லது கிடைக்க வேண்டியவற்றைக் கருத்திற் கொண்டு வருவாய் நியாயமான பெறுமதியில் அளவிடப்படும்.

நிதிக் காலப்பகுதியில வருவாய், எப்.ஓ.பீ (FOB) பெறுமதியின் அடிப்படையில் பதிவுசெய்யப்பட்ட விலைப்பட்டியல் பெறுமதிகள் மீது இனங்காணப்பட்டிருந்தது.

### 3.2 செலவினம்

வியாபாரம் செய்கையில் மற்றும் மூலதனச் சொத்துக்களைப் பேணுவதில் உறப்பட்ட அனைத்துச் செலவினமும் ஆண்டுக்கான இலாபத்தில் / (நட்டத்தில்) வந்த பணத்தின் அடிப்படையொன்றின் மீது அறவிடப்பட்டுள்ளது.

## 4. பங்கு/தெரிவிக்கப்பட்ட மூலதனம் (கணக்கிலுள்ள குறிப்பு 22)

விநியோகிக்கப்பட்ட பங்குகள் ரூபா 13,000,000/-

கம்பனியின் செயலாளர்களின் பங்குப் பேரேடு திறைசேரியின் செயலாளரினால் கொள்ளப்பட்டிருக்கின்ற பங்குகளாக மேலுள்ள தொகையைக் கொண்டிருப்பதுடன், தற்பேதைய செயலாளர்கள் 2002 ஆம் ஆண்டிலிருந்து மட்டுமே கம்பனிக்குரிய பங்கினைக் கொண்டிருக்கின்ற நிலை தொடர்பான தகல்களைக் கொண்டிருக்கின்றனர்.

## 5. மூலதன அர்ப்பணிப்புகள்

ஐந்தொகையின் திகதியில் மூலதன அர்ப்பணிப்புக்கள் எதுவுமில்லை.

## 6. தற்செயலான பொறுப்புகள்

கஹடகஹவில் சுரங்க நிலப்பகுதியின் ஒரு பகுதி தொடர்பில் வழக்கொன்றின் நிலுவை அறிவிப்பொன்று கொண்டு வரப்பட்டிருந்தது.

## 7. பணிப்பாளர்களின் ஆர்வம்

கிடைக்கச் செய்யப்பட்ட தகவல்களின்படி தற்போதைய கம்பனிப் பணிப்பாளர் கம்பனியின் எந்த ஒப்பந்தத்தில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஆர்வம் கொண்டிருக்கவில்லை.

## கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்

**கணக்குக் குறிப்புகள்**

| | மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டு | | 2014 | 2013 |
|---|---|---|---|---|
| | *தொகை ரூபாக்களில்* | **குறிப்புக்கள்** | | |
| **08** | **வருவாயும் மானியங்களும்** | | | |
| | விற்பனை வருவாய் | | 144,111,798.15 | 91,685,689.71 |
| **09** | **காரீய அகழ்வுச் செலவு** | | | |
| | ஆரம்பத்தில் கையிருப்பு நிலுவை | **09-01** | 55,367,950.33 | 91,963,177.22 |
| | தன்னாள் செலவு | **09-02** | 46,429,875.16 | 37,293,153.32 |
| | ஆதரவுச் சேவைச் செலவு | **09-03** | 27,347,420.98 | 24,585,550.00 |
| | அரச கொடுப்பனவுகள் | | 7,041,446.76 | 4,346,062.45 |
| | | | 136,186,693.23 | 158,187,942.99 |
| | கழிக்க இறுதிக் கையிருப்பு | | (83,435,985.43) | (121,764,354.37) |
| | **கூட்டுக வருடத்திற்கான காரிய அகழ்வுச் செலவு** | | 52,750,707.80 | 36,423,588.62 |

**வருட ஆரப்பக் கையிருப்பு**

1 ஏப்ரல் 2013 ம் திகதியிலான கையிருப்பில் காணப்படும் உண்மையான விற்பனைக்குகந்த காரீயத்தினை இனங்காண்பதற்கு இவ்வருட உற்பத்தியை மேற்கொள்ள முன் கம்பனி பௌதிகக் கையிருப்புச் சரிபார்ப்பு மற்றும் மதிப்பீடொன்றினை மேற்கொண்டது. இதன் போது 66,396,403/67 பெறுமதியான கணிசமான தொகைக் காரீயம் விற்பனைக்குகந்தகல்ல என்பது கண்டுபிடிக்கப்பட்டது. எனவே விற்பனைக்குகந்த உற்பத்தியின் சரியான தொகையை விளைபயனாக்குவதற்கு வருட ஆரம்பத்தில் கையிருப்பை பதிவழிப்புச் செய்வதற்கு முகாமைத்துவம் தீர்மானித்தது.

| | | 2014 | 2013 |
|---|---|---|---|
| **ஆரம்பத்தில் கையிருப்பு நிலுவை** | **09-01** | | |
| ஆரம்ப நிலுவை | | 121,764,354.00 | - |
| பதிவழிப்புச் செய்யப்பட்ட கையிருப்பு | | (66,396,403.67) | - |
| கணக்குகளில் கருதப்பட்ட நிலுவை | | **55,367,950.33** | **-** |
| **வேதனச் செலவு** | **09-02** | | |
| வேதனங்களும் சம்பளங்களும் | | 32,545,283.42 | 25,219,965.94 |
| மேலதிக நேர கொடுப்பனவு | | 2,774,981.56 | 4,129,251.37 |
| கொடுப்பனவுகள் | | 1,998,416.40 | 1,823,055.85 |
| சேமலாப நிதிய உதவுதொகைகள் | | 3,905,434.01 | 3,026,395.91 |
| நம்பிக்கைப் பொறுப்பு உதவுதொகைகள் | | 976,358.48 | 756,598.98 |
| பதவியினர் நலன்புரி | | 3,419,160.91 | 1,959,769.89 |
| வெகுமதி | | 810,240.38 | 378,115.38 |
| | | **46,429,875.16** | **37,293,153.32** |
| **ஆதரவுச் சேவைச் செலவு** | | | |
| அகழ்வுச் செலவினம் | **09-03** | 13,248,802.75 | 12,627,678.33 |
| வலுவும் மின்சாரமும் | | 14,098,618.23 | 11,957,871.67 |
| | | **27,347,420.98** | **24,585,550.00** |

## கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்

### கணக்குக் குறிப்புகள்

| மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டு<br>*தொகை ரூபாக்களில்* | குறிப்புக்கள் | 2014 | 2013 |
|---|---|---|---|
| **10 தன்னாள் செலவு** | | | |
| பணிப்பாளர்களின் படி | | 1,293,998.00 | 1,695,710.07 |
| வேதனங்களும் நிருவாகச் சம்பளங்களும் | | 10,189,796.04 | 8,316,155.78 |
| மேலதிக நேர கொடுப்பனவு | | 1,718,575.97 | 699,936.52 |
| கொடுப்பனவுகள் | | 550,254.25 | - |
| சேமலாப நிதிய உதவுதொகைகள் | | 1,222,775.51 | 997,938.69 |
| நம்பிக்கைப் பொறுப்பு உதவுதொகைகள் | | 305,693.89 | 249,484.67 |
| பதவியினர் நலன்புரி | | 113,750.00 | 108,500.00 |
| வெகுமதி | | 15,394,843.66 | 12,067,725.74 |
| **11 தாபனம் மற்றும் நிருவாகச் செலவு** | | | |
| வாடகை | | 1,911,800.00 | 2,287,000.00 |
| இறைகளும் வரிகளும் | | 9,397.16 | 15,409.31 |
| பொதுச் செலவுகள் | | 6,292.07 | 44,416.61 |
| மருத்துவ உதவி | | 42,508.48 | 37,473.67 |
| காப்புறுதி | | 586,654.25 | 541,840.10 |
| அச்சடித்தலும் காகிதாதிகளும் | | 509,252.28 | 522,159.13 |
| தபால் | | 76,856.10 | 82,848.53 |
| சட்ட மற்றும் நிபுணத்துவக் கட்டணம் | | 246,197.65 | 389,892.00 |
| பாதுகாப்புச் செலவு | | 5,342,133.88 | 4,321,749.39 |
| புத்தகங்களும் சஞ்சிகைகளும் | | 47,990.00 | 64,329.00 |
| செயலகச் செலவுகள் | | 200,773.00 | 223,993.00 |
| கணக்காய்வுக் கட்டணம் | | 165,304.00 | 165,000.00 |
| பிரயாணமும் பொக்குவரத்தும் | | 3,597,210.99 | 3,717,814.56 |
| உபசரணைச்செலவு | | 472,753.57 | 335,678.99 |
| மின்சாரம் | | 325,606.35 | 237,891.94 |
| உத்தரவுச்சீட்டும்,அனுமதிப்பத்திரங்களும் | | 200,682.00 | 74,144.51 |
| சந்தாக்கட்டணம் | | 46,598.76 | - |
| ஆய்வு மற்றும் அபிவிருத்திக் கட்டணங்கள் | | 1,559,691.07 | - |
| எரிபொருள் | | 1,513,888.64 | - |
| வருடாந்தக் கணக்குளளைத் தயாரிப்பதற்கான செலவுகள் | | 329,293.00 | - |
| பெருந்தோட்டச் செலவுகள் | | 1,759,488.58 | - |
| பயிற்சிநெறிச்செலவுகள் | | 587,600.00 | 235,300.00 |
| சில்லறைச் செலவு | | - | 1,100.00 |
| | | **19,537,971.83** | **13,298,040.74** |
| **12 பராமரிப்புச் செலவு** | | | |
| அலுவலகம் அலுவலக உபகரணப் பராமரிப்பு | | 563,541.95 | 107,100.20 |
| கட்டடப் பராமரிப்பு | | 335,077.12 | 212,036.07 |
| இயந்திரப் பராமரிப்பு | | 440,628.99 | 485,881.54 |
| உள்ளக வீதிகள் பராமரிப்பு | | - | 325,000.00 |
| | | **1,339,248.06** | **1,130,017.81** |
| **13 பயன்பாட்டுச் செலவு** | | | |
| நீர் கட்டணம் | | 48,044.40 | 92,559.78 |
| தொலைபேசி | | 550,985.09 | 593,170.84 |
| | | **599,029.49** | **685,730.62** |

**கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்**

**கணக்குக் குறிப்புகள்**

| **மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டு**<br>*தொகை ரூபாக்களில்* | **குறிப்புக்கள்** | **2014** | **2013** |
|---|---|---|---|
| **14 தேய்மானச் செலவு** | | | |
| கட்டடம் | | 1,629,149.99 | 753,502.76 |
| மின்னியல் உபகரணம் | | 345,096.00 | 1,053,232.89 |
| மின்பிறப்பாக்கி | | 1,234,127.23 | 162,887.76 |
| மோட்டார் வாகனம் | | 1,876,300.50 | 1,695,000.00 |
| அலுவலக உபகரணம் | | 598,352.04 | 75,903.00 |
| ஏனைய சொத்துக்கள் | | 693,999.00 | 278,181.06 |
| பொறித்தொகுதியும் இயந்திரமும் | | 12,343,888.93 | 1,321,386.32 |
| சுரங்க அபிவிருத்தி செலவுகள் | | 788,354.51 | 530,855.83 |
| தளபாடமும் பொருத்துக்களும் | | 329,754.03 | 113,585.70 |
| தலைமை அலுவலக இடைத்தடுப்பிடல் | | 163,825.36 | 163,825.36 |
| மோட்டார் வாகனம் | | 164,900.00 | - |
| | | **20,167,747.60** | **6,148,360.68** |
| **15 விற்பனை மற்றும் விநியோகச்செலவு** | | | |
| பயணமும் போக்குவரத்தும் | | 1,376,000.00 | 864,000.00 |
| விற்பனை ஊக்குவிப்பு | | 897,096.70 | 889,193.91 |
| விளம்பரப்படுத்தல் செலவுகள் | | 854,180.00 | 1,062,295.28 |
| கப்பல் வாடகை செலவுகள் | | 750,001.41 | 759,465.47 |
| | | **3,877,278.11** | **3,574,954.66** |
| **16 நிதி மற்றும் ஏனைய் செலவுகள்** | | | |
| வங்கி அறவீடுகள் | | 234,311.95 | 74,482.42 |
| கோரப்படாத குத்தகையின் பெறுமதி சேர் வரி | | 331,560.00 | 331,560.00 |
| குத்தகை வட்டி அறவீடுகள் | | 671,376.66 | 853,495.08 |
| கையிருப்புக்கள் : கையிருப்புச் சீராக்கம் | | 13,752.06 | 1,500.00 |
| அனுமதி மறுக்கப்பட்ட உள்ளீட்டு பெறுமதி சேர் வரி | | 5,970,583.50 | - |
| CRS - சமூக ஆதரவுச் செலவுகள் | | 1,252,251.00 | - |
| தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி | | - | 87,250.99 |
| தென்னந் தோட்டத்திற்கான செலவுகள் | | - | 1,521,415.00 |
| | | **8,473,835.17** | **2,869,703.49** |
| **17 சில்லறை வருமானம்** | | | |
| பெருந்தோட்ட வருமானம் | | 193,033.00 | 50,936.00 |
| வட்டி வருமானம் | | 1,253,514.45 | 1,878,857.13 |
| | | **1,446,547.45** | **1,929,793.13** |

# கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்

**கணக்குக் குறிப்புகள்**

**18 ஆதனம்,பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்**

| நிகர கொண்டு செல்லப்படும் பெறுமதி | 2013.3.31 இல் உள்ளவாரான மீதி | சேர்க்கைகள்/ மாற்றீடுகள் | அழிக்கப்பட்டவைகள்/ மாற்றீடுகள் | மீள்மதிப்பீட்டுச்சீ ராக்கம் | 2014/03/31 இல் உள்ளவாரான மீதி |
|---|---|---|---|---|---|
| காணி | 25,500,000.00 | - | - | - | 25,500,000.00 |
| கட்டடம் | 54,304,999.82 | - | - | - | 54,304,999.82 |
| பொறித்தொகுதியம் உபகரணமும் | 122,817,135.61 | 621,753.73 | - | - | 123,438,889.34 |
| மின் உபகரணம் | 1,719,980.00 | 5,500.00 | - | - | 1,725,480.00 |
| மோட்டார் வாகனம் | - | 1,649,000.00 | - | - | 1,649,000.00 |
| ஏனைய சொத்துக்கள் | 3,021,375.00 | 3,918,615.00 | - | - | 6,939,990.00 |
| அலுவலக உபகரணம் | 2,656,363.97 | 335,396.25 | - | - | 2,991,760.22 |
| மின்பிறப்பாக்கி | 15,426,590.40 | - | - | - | 15,426,590.40 |
| நிலக்கீழ் அபிவிருத்தி | 7,705,000.00 | 178,545.08 | - | - | 7,883,545.08 |
| தென்னை பயிரிடல் அபிவிருத்தி | 1,694,235.36 | - | - | - | 1,694,235.36 |
| தளபாடங்களும் பொருத்துக்களும் | 1,648,770.14 | - | - | - | 1,648,770.14 |
| தலைமை அலுவலக இடைத்தடுப்பிடல் | 819,126.80 | - | - | - | 819,126.80 |
| | 237,313,577.10 | 6,708,810.06 | - | - | 244,022,387.16 |

| | 2013.3.31 இல் உள்ளவாரான மீதி | சேர்க்கைகள்/ மாற்றீடுகள் | அழிக்கப்பட்டவைகள்/ மாற்றீடுகள் | மீள்மதிப்பீட்டுச்சீராக்கம் | 2014/03/31 இல் உள்ளவாரான மீதி |
|---|---|---|---|---|---|
| **நிதிக்குத்தகைச்சொத்துக்கள்** | | | | | |
| மோட்டார் வாகனம் | 18,763,005.00 | - | - | - | 18,763,005.00 |
| | 18,763,005.00 | - | - | - | 18,763,005.00 |

| | 2013.3.31 இல் உள்ளவாரான மீதி | சேர்க்கைகள்/ மாற்றீடுகள் | அழிக்கப்பட்டவைகள்/ மாற்றீடுகள் | மீள்மதிப்பீட்டுச்சீராக்கம் | 2014/03/31 இல் உள்ளவாரான மீதி |
|---|---|---|---|---|---|
| **முன்னேற்றம்** | | | | | |
| **பொறித்தொகுதியம் உபகரணமும்** | - | 4,834,049.52 | - | - | 4,834,049.52 |
| **கட்டடம்** | - | 19,782,623.12 | - | - | 19,782,623.12 |
| | - | 24,616,672.64 | - | - | 24,616,672.64 |
| **மொத்தச் சொத்துக்கள்** | 256,076,582.10 | 31,325,482.70 | - | - | 287,402,064.80 |

# கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்
## கணக்குக் குறிப்புகள்

| | 2013.3.31 இல் உள்ளவாரான மீதி | சேர்க்கைகள்/ மாற்றீடுகள் | அழிக்கப்பட்டவைகள்/ மாற்றீடுகள் | மீள்மதிப்பீட்டுச்சீராக்கம் | 2014/03/31 இல் உள்ளவாரான மீதி |
|---|---|---|---|---|---|
| **ஆதனம்,பொறித்தொகுதி மற்றும்** | | | | | |
| **உபகரணங்கள் தேய்மானம்** | | | | | |
| **செலவு அல்லது மதிப்பட்டில்** | | | | | |
| காணி | - | - | - | - | - |
| கட்டடம் | - | 1,629,149.99 | - | - | 1,629,149.99 |
| பொறித்தொகுதியம் உபகரணமும் | - | 12,343,888.94 | - | - | 12,343,888.94 |
| மின் உபகரணம் | - | 345,096.00 | - | - | 345,096.00 |
| மோட்டார் வாகனம் | - | 164,900.00 | - | - | 164,900.00 |
| ஏனைய சொத்துக்கள் | - | 693,999.00 | - | - | 693,999.00 |
| அலுவலக உபகரணம் | - | 598,352.04 | - | - | 598,352.04 |
| மின்பிறப்பாக்கி | - | 1,234,127.23 | - | - | 1,234,127.23 |
| நிலக்கீழ் அபிவிருத்தி | - | 788,354.51 | - | - | 788,354.51 |
| தளபாடங்களும் பொருத்துக்களும் | - | 329,754.03 | - | - | 329,754.03 |
| தலைமை அலுவலக இடைத்தடுப்பிடல் | - | 163,825.37 | - | - | 163,825.37 |
| | - | 18,291,447.10 | - | - | 18,291,447.10 |
| **நிதிக்குத்தகச்சொத்துக்கள்** | **2013.3.31 இல் உள்ளவாரான மீதி** | **சேர்க்கைகள்/ மாற்றீடுகள்** | **அழிக்கப்பட்டவைகள்/ மாற்றீடுகள்** | **மீள்மதிப்பீட்டுச்சீராக்கம்** | **2014/03/31 இல் உள்ளவாரான மீதி** |
| மோட்டார் வாகனம் | - | 1,876,300.50 | - | - | 1,876,300.50 |
| | - | 1,876,300.50 | - | - | 1,876,300.50 |
| **மொத்த தேய்மானம்** | - | 20,167,747.60 | - | - | 20,167,747.60 |
| **மொத்த குறைத்து எழுதப்பட்ட பெறுமானம்** | 256,076,582.10 | - | - | - | 267,234,317.20 |

# கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்

**கணக்குக் குறிப்புகள்**

| | **மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டு** *தொகை ரூபாக்களில்* | **குறிப்புக்கள்** | **2014** | **2013** |
|---|---|---|---|---|
| **19** | **கையிருப்பு** | | | |
| | நுகரக்கூடிய கையிருப்பு | | 21,831,330.13 | 13,750,601.82 |
| | கையிருப்பு - காரீயம் | | 83,435,985.43 | 121,764,354.37 |
| | | | **105,267,315.56** | **135,514,956.19** |
| **20** | **கடன்பெறுநர்கள்,வைப்புகள் மற்றும் பெறுகைகள்** | | | |
| | பெறக்கூடிய கணக்குகள் | | 7,867,148.55 | 14,254,647.59 |
| | முற்பணம் | | 18,501.93 | 2,716.00 |
| | வைப்புக்கள் | | 313,908.16 | 102,433.16 |
| | பண்டிகை முற்பணம் | | - | 1,250.00 |
| | சிறிலங்கா ரெலிகொம் வைப்புகள் | | 5,000.00 | 5,000.00 |
| | பெறுமதிசேர் வரி பெறுகைகள் | | 642,910.97 | 11,817,972.50 |
| | கொள்வனவு முற்பணங்கள் | | 15,000.00 | 737,727.30 |
| | வாடகை முற்பணம் | | 1,026,800.00 | 976,800.00 |
| | PAYE | | - | 157,592.00 |
| | மீளப்பெறக்கூடியவைகள் | | | |
| | | | **9,889,269.61** | **28,056,138.55** |
| **21** | **பணமும் பணத்திற்குச் சமனானவையும்** | | | |
| | இலங்கை வங்கி - ரிதீகம | | 188,364.93 | 1,318,827.68 |
| | இலங்கை வங்கி - கொள்ளுப்பிட்டி | | 36,788.44 | 958,588.52 |
| | உ.வெ.நாணயக் கணக்கு-இலங்கை வங்கி -கொள்ளுப்பிட்டி | | 13,541,287.38 | 9,416,114.23 |
| | சில்லறைக் காசு- அகழ்வு அலுவலகம் | | 23,398.76 | 3,791.82 |
| | சில்லறைக் காசு- தலைமைஅலுவலகம் | | 10,419.78 | 12,132.38 |
| | | | **13,800,259.29** | **11,709,454.63** |
| **22** | **தெரிவிக்கப்பட்ட மூலதனம்** | | | |
| | நிறுத்தப்பட்ட பங்கு முதலீடு | | 13,000,000.00 | 13,000,000.00 |
| | | | **13,000,000.00** | **13,000,000.00** |
| **23** | **ஒதுக்கம்** | | | |
| | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | 237,113,746.70 | 237,113,746.70 |
| | மூலதன ஒதுக்கம் | | 10,381,587.00 | 10,381,587.00 |
| | நியுமோகோனிஒசியஸ் கமபனி ஒதுக்கம் | | 2,725,129.00 | 2,725,129.00 |
| | | | **250,220,462.70** | **250,220,462.70** |
| **24** | **நியதிக் கடன்களும்,வங்கி மேலதிகப் பற்றுக்களும்** | | | |
| | நியதிக் கடன் | **24-01** | - | 2,500,000.00 |
| | | | - | **2,500,000.00** |
| | **வங்கிக் கடன்கள்** | **24-01** | | |
| | **மக்கள் வங்கிக் கடன்கள்** | | | |
| | 2012.04.01 மீதி | | 2,500,000.00 | 8,500,000.00 |
| | மீள் கொடுப்பனவுகள் | | (2,500,000.00) | (6,000,000.00) |
| | 2013.03.31 மீதி | | - | **2,500,000.00** |
| | **திறைசேரி வைப்புக் கடன்கள்** | | | |
| | 2012.04.01 மீதி | | - | - |
| | மீள் கொடுப்பனவுகள் | | - | - |
| | 2013.03.31 மீதி | | - | - |
| | | | - | **2,500,000.00** |

## கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்

### கணக்குக் குறிப்புகள்

### 25 செலுத்த வேண்டிய குத்தகை

ஒப்பந்த இல

| உருப்படி BOC | KM3311 | PB9721 | KM-3641 | மொத்தம் |
|---|---|---|---|---|
| வாடகைத்தொகை | 124,847.00 | 100,598.00 | 105,403.00 | |
| வாடகைக்காலப்பகுதி | 60 | 60 | 60 | |
| மொத்தம் | 7,490,820.00 | 6,035,880.00 | 6,324,180.00 | 19,850,880.00 |
| செலவு | 6,100,000.00 | 5,130,000.00 | 5,150,000.00 | 16,380,000.00 |
| வட்டி | 1,390,820.00 | 905,880.00 | 1,174,180.00 | 3,470,880.00 |
| **மொத்தம்** | | | | |
| ஆரம்ப நிலுவை | 3,870,257.00 | 3,118,538.00 | 3,267,493.00 | 10,256,288.00 |
| 2013 இல் செலுத்தப்பட்ட தொகை | (1,498,164.00) | (1,207,176.00) | (1,264,836.00) | (3,970,176.00) |
| மீதி | **2,372,093.00** | **1,911,362.00** | **2,002,657.00** | **6,286,112.00** |
| நீண்டகால | 873,929.00 | 704,186.00 | 737,821.00 | 2,315,936.00 |
| நடைமுறை | 1,498,164.00 | 1,207,176.00 | 1,264,836.00 | 3,970,176.00 |
| மீதி | 2,372,093.00 | 1,911,362.00 | 2,002,657.00 | **6,286,112.00** |
| **இடைநிறுத்தப்பட்ட வட்டி** | | | | |
| ஆரம்ப வட்டி | 376,965.42 | 245,528.13 | 318,247.69 | 940,741.25 |
| வருவாய் கணக்கு | (323,563.34) | (151,475.02) | (196,338.30) | (671,376.65) |
| மீதி | 53,402.08 | 94,053.11 | 121,909.40 | **269,364.59** |
| மீதி | | | | |
| நீண்டகால | 7,869.78 | 13,860.46 | 17,965.60 | 39,695.83 |
| நடைமுறை | 45,532.30 | 80,192.66 | 103,943.80 | 229,668.76 |
| மொத்தம் | 53,402.08 | 94,053.11 | 121,909.40 | **269,364.59** |
| மீதி | | | | |
| நீண்டகால | 943,648.69 | 690,325.54 | 719,855.40 | 2,353,829.64 |
| நடைமுறை | 1,375,042.23 | 1,126,983.34 | 1,160,892.20 | 3,662,917.77 |
| மொத்தம் | **2,318,690.92** | **1,817,308.89** | **1,880,747.60** | **6,016,747.41** |

## கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்

**கணக்குக் குறிப்புகள்**

| **மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டு** | | **2014** | **2013** |
|---|---|---|---|
| *தொகை ரூபாக்களில்* | **குறிப்புக்கள்** | | |
| **26** | **வியாபாரம் மற்றும் ஏனைய கடன்தருமதியாளர்கள்** | | |
| | திசாநாயக ஹாட்வெயார் | 9,880.50 | 585,346.50 |
| | ஜயமினி கன்ஸ்டிரக்சன்ஸ் | 278,805.00 | 18,000.00 |
| | எம பீ சி எஸ் - ரிதீகம | 48,008.00 | 12,975.00 |
| | ரொசே இன்ஜினியரிங் பிறைவட் லிமிட்டட் | 170,700.00 | 283,800.00 |
| | சொலெக்ஸ் இன்ஜினியரிங் | 24,480.00 | 189,964.80 |
| | ஸ்பீட் வே போர்வட்ஸ் | 57,805.77 | 12,780.77 |
| | ஸ்டபோர்ட் மோட்டார் கம்பனி | 24,572.00 | 9,991.60 |
| | எயார்லைன் டிரேடர்ஸ் | (9,700.00) | - |
| | அமெரிக்கன் பிரீமியம் வோடர் சிஜ்டம் பிஙைவட் லிமிடட் | 2,065.50 | - |
| | பாஸ்ட் பிரின்டிங் பிறைவட் லிமிட்டட் | 3,831.12 | - |
| | ஹீலிக்ஸ இன்ஜீனியரிங் பிறைவட் லிமிட்டட் | 42,771.46 | - |
| | ஐ டி காமினி ஜயசூரிய | 5,000.00 | - |
| | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் | 5,000.00 | - |
| | லங்கா ஐ பீ சி கம்பனி பிறைவட் லிமிட்டட் | 92,682.50 | - |
| | நாணயக்கார எல் டீ ஜே எம் பீ | 37,500.00 | - |
| | நிவ் சைன் ஜனிட்டோரியல் & மெயின்டனன்ஸ் சேர்விஸ் | 8,600.00 | - |
| | டபில்யூ டீ எஸ் டி ஜயரத்ன | 684.00 | - |
| | வெல்கம் பிரின்டர்ஸ் & அட்வடைசிங் சேர்விஸ் | 56,880.00 | - |
| | செனித் இன்ஜினியரிங் | 59,500.00 | - |
| | கொலோனியல் ஹாட்வெயார் ஸ்டோர்ஸ் | - | 45,000.00 |
| | இலெக்ட்ரோ ரெப் இன்ஜினியரிங் பிறைவட் லிமிட்டட் | | 19,916.95 |
| | இப்பாகமுவ பாமசி | - | 1,304.00 |
| | மொடர்ன் ஹாட்வெயார் சென்ரர் | - | 76,750.00 |
| | என் டீ ஓ லங்கா பிறைவட் லிமிட்டெட் | - | 3,847.20 |
| | ருப் மார்ட் பிறைவட் லிமிட்டட் | - | 3,571.43 |
| | சமோடா டிரேட் சென்ரர் | - | 19,750.00 |
| | வயம்ப கோப் ரூரல் பேங் யூனியன் பிறைவட் லிமிட்டட் | | 5,950.00 |
| | அக்சொப்ட் சொலூசன்ஸ் பிறைவட் லிமிட்டெட் | | 48,500.00 |
| | | **919,065.85** | **1,337,448.25** |
| **27** | **செலுத்த வேண்டிய பங்கிலாபம்** | | |
| | ஆரம்ப நிலுவை | 3,702,986.65 | 3,702,986.65 |
| | செலுத்தப்பட்ட பங்கிலாபம் | (3,702,986.65) | - |
| | 2013/2014 இற்காகாக் கோரப்பட்ட பங்கிலாபம் | 954,196.07 | - |
| | | **954,196.07** | **3,702,986.65** |

## கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்

**கணக்குக் குறிப்புகள்**

| **மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டு**<br>*தொகை ரூபாக்களில்* | **குறிப்புக்கள்** | **2014** | **2013** |
|---|---|---|---|
| **28 வரிக்கான எற்பாடு** | | | |
| ஆரம்ப நிலுவை | | 12,376,561.15 | 11,523,573.50 |
| பெ. சே. வரிக்கு எதிராக ஈடுசெய்யப்பட்ட வருமானவரி | | (6,420,788.20) | - |
| ஏற்பாட்டின் கீழுள்ள வருமானவரி | | 4,041,364.45 | - |
| செலுத்த வேண்டிய பங்கிலாப வரி | | 106,021.79 | - |
| இவ்வருடம் செலுத்த வேண்டிய வருமான வரி | | 4,581,762.69 | 852,987.65 |
| பிற்போடப்பட்ட வரி | | (75,000.00) | - |
| | | **14,609,921.88** | **12,376,561.15** |
| | | | |
| **29 உறப்பட்ட கட்டணங்கள்** | | | |
| ஏஸ் இன்ரநஷனல் எக்ஸ்பிரஸ் (பிறை.) லிமி. | | 10,268.20 | 2,539.16 |
| கணக்காய்வுக் கட்டணம் - றணவீர, நாகசிங்க & கம்பனி | | 257,500.00 | 164,696.00 |
| செலுத்த வேண்டிய ஊ.ந.பொ.நி | | 101,282.13 | 95,200.88 |
| செலுத்த வேண்டிய ஊ.சே.நி | | 742,662.98 | 698,067.79 |
| மின்சாரச் சபை | | 1,211,780.56 | 1,054,862.65 |
| லேடி லகோர் கடன் நிதியம் | | 234,300.00 | 325,600.00 |
| செலுத்த வேண்டிய P.A.Y.E வரி | | 30,000.00 | 69,600.00 |
| வேதனங்கள்,சம்பளக் கொடுப்பனவிற்கான கணக்கு | | 3,189,507.82 | 3,260,758.77 |
| ஷேகானி என்ரபிறைஸ் குருணாகல் | | 7,975.00 | 7,975.00 |
| செலுத்த வேண்டிய தொலைபேசிப் பட்டியல் | | 30,804.93 | 38,710.07 |
| விஜிலன்ட் செகுறிட்டி சேர்விசஸ் | | 59,311.86 | 931,505.64 |
| அல்பெக்ஸ் நெட்வேர்க் செகியூரிட்டி லிமிட்டட் | | 823,901.92 | - |
| தேசிய நீர் வழங்கல் சபை | | 1,086.80 | - |
| செலுத்த வேண்டிய தே.க.வ / பெ.சே.வரி | | - | 13,752.06 |
| | | **6,700,382.20** | **6,663,268.02** |

# வரிவிதிப்புக்கான குறிப்புக்கள்

உண்ணாட்டரசிறை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிசைவாக , கணிப்பீட்டு வருடமான 2013/2014 இன் போது ஸ்ரீ லங்கா நிதியறிக்கையிடல் நியமங்கள் (SLFRS)/ லங்கா கணக்கீட்டு நியமங்களையுள்ளடக்கிய (LKAS) ஸ்ரீ லங்கா கணக்கீட்டு நியமங்களை பின்பற்றி நிதிக்கூற்றுக்களை தயாரித்தமையின் காரணமாக அதிவீசேட வர்த்தமானி இல. 1857/8 தொடர்பாக பின்வரும் விளக்கக்குறிப்புக்கள் தரப்படுகின்றன.

| *இல* | *பின்பற்றிய கணக்கீட்டு நியமம்* | *வரித் தேவைகளுக்காக பின்ப பின்பற்ற வேண்டிய சீராக்கல்களும் தகவல்களும்* |
|---|---|---|
| **1.0** | **SLFRS/LKAS (இலங்கை நிதியறிக்கையிடல் நியமங்கள்) முறைமையினை முதன்முதலாகப் பின்பற்றல்** | • தாபனமானது 31 ஏப்ரல் 2012 ம் திகதி சொத்துக்கள் மீதும் 1 ஏப்ரல் 2013 ம் திகதி சரக்கிறுப்புக்கள் மீதும் மீள்மதிப்பீட்டை மேற்கொண்டது மேலும் வரிவிதிப்பு தொடர்பாக எவ்விதச்சீராக்கல்களையும் மேற்கொள்ளவில்லை. |
| **2.0** | **சரக்கிறுபபுக்கள் (LKAS 2)** | • தற்போதைய வரி நடைமுறைகளுக்கேற்ப நடைமுறையல்லாத சொத்துக்களைத் தொடர்ந்தும் சரக்கிறுப்பாக கருதிக்கையாளலாம் என்பதால் கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக (LKAS) எந்தச் சரக்கிறுப்பும் (உ+ம் மீளளிக்கக்கூடிய பொதியிடும் பதார்த்தங்கள்) மீள வகைப்படுத்தப்படவில்லை. |
| **3.0** | **நிர்மாணிப்பு ஒப்பந்தங்கள் (LKAS 11)** | • நிறுவனத்திற்கு ஏற்புடையதல்ல. |
| **4.0** | **வருமான வரிகள் (LKAS 12)** | • நிறுவனத்திற்கு ஏற்புடையதல்ல. |
| **5.0** | **ஆதனம்,பொறித் தொகுதியும் உபகரணமும் (PPE) (LKAS 16)** | • நிறுவனத்திற்கு ஏற்புடையதல்ல. |
| **6.0** | **குத்தகைகள் (LKAS 17)** | • கணக்குகளுக்கான குறிப்பு இல.25 இல் குறித்துரைக்கப்பட்டவாறு. |
| **7.0** | **வருவாய் (LKAS 18)** | • தாபனச் செயற்பாடுகளுக்கான சகல வருவாய்களும் வரிவிதிப்பிற்காக கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| **8.0** | **பணியாளர் நன்மைகள் (LKAS 19)** | • இலாபப்பகிர்வுக்கான திட்டங்கள் ஏதுமில்லை.<br>• ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட பணியினர் கடன்களுக்கு வட்டி அறவிடப்படவில்லை . எனவே வரிவிதிப்புக்கான எத்தகைய சீராக்கல்களும் செய்யப்படவில்லை.<br>• நிரப்பு பொருட்களை / சேவைகளை , விலைக்குறைப்பை அடிப்படையாகக் கொண்டு எவ்வித நலன்களும் வழங்கப்படவில்லை. |
| **9.0** | **அரச மானியங்களும் உதவிகளும் (LKAS 20)** | • இவ்வருடத்திற்கு ஏற்புடையதல்ல. |
| **10.0** | **வெளிநாட்டு நாணய மாற்று வீதங்'களின் விளைவுகள் (LKAS 21 )** | • ஏனைய விரிவான வருமானத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளது. |
| **11.0** | **கடன்பெறும் செலவுகள் (LKAS 23)** | • நிறுவனத்திற்கு ஏற்புடையதல்ல. |
| **12.0** | **ஓய்வூதிய நலன் நிதியம் அல்லது திட்டம் (LKAS 26)** | • ஓய்வூதிய நலத்திட்ட ஏற்பாட்டு வித்தியாசங்கள் மீது எத்தகைய இலாபமோ அல்லது நட்டமோ ஏனைய விரிவான வருமானத்திற்கு (OCI) அறவிடப்படவில்லை. |
| **13.0** | **சொத்துக்களின் பெறுமதி இழப்பு (LKAS 36)** | • மாற்றிப்பபதிவிடலின் மீது எத்தகைய பெறுமதி இழப்பு இலாபம் அல்லது நட்டம் விரிவான வருமானக் கூற்றில் (SOCI) அறவிடப்படவில்லை |
| **14.0** | **முதலீட்டு சொத்து (LKAS 40)** | • நிறுவனத்திற்கு ஏற்புடையதல்ல. |
| **15.0** | **மூட்டு அடிப்படையிலான கொடுப்பனவு (SLFRS 2)** | • நிறுவனத்திற்கு ஏற்புடையதல்ல. |
| **16.0** | **வர்த்தக ஒருங்கிணைப்புக்கள் (SLFRS 3)** | • நிறுவனத்திற்கு ஏற்புடையதல்ல. |
| **17.0** | **நடைமுறைச் சொத்துக்குள் அல்லாதவையின் விற்பனையும் நிறுத்தி வைக்கப்பட்ட தொழிற்பாடுகளும் (SLFRS 5)** | • நிறுவனத்திற்கு ஏற்புடையதல்ல. |
| **18.0** | **நிதியியல் கருவிகள் (SLFRS 7 ., SLFRS 9 , LKAS 32, & LKAS 39)** | • நிறுவனத்திற்கு ஏற்புடையதல்ல. |

# கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்

## வருமான வரிக் கணிப்பு

### 2013/14 ஆம் ஆண்டுக்கான மதிப்பீடு

| | | | | |
|---|---|---|---|---|
| **கணக்கின்படி இலாபம் / (நட்டம்)** | | | | 21,187,780.68 |
| கழிக்க: அரச மானியம் | | | | - |
| | | | | 21,187,780.68 |
| **மீளக்கூட்டுக** | | | | |
| பணிக்கொடை ஏற்பாடு | | | 2,229,903.20 | |
| சட்டக் கட்டணங்கள் | | | 103,697.65 | |
| உபசரணைச் செலவு | | | 472,753.57 | |
| தேய்மானம் | | | 20,167,747.60 | |
| விற்பனை மேம்படுத்தல் செலவினம் | 897,096.70 | 25% | 224,274.18 | |
| விளம்பரம் | 854,180.00 | 25% | 213,545.00 | |
| கோரப்படாத குத்தகைப் பெ.சேர் வரி | | | 331,560.00 | |
| குத்தகை வட்டி அறவீடுகள் | | | 671,376.66 | |
| அனுமதி மறுக்கப்பட்ட உள்ளீட்டு பெ.சே.வ | | | 5,970,583.50 | |
| CRS - சமூக ஆதரவுச் செலவுகள் | | | 1,252,251.00 | 31,637,692.35 |
| | | | | **52,825,473.04** |
| **கழிக்க:** | | | | |
| மூலதனக் கொடுப்பனவு | குறிப்பு 01 | | | (7,460,317.75) |
| குத்தகை,வாடகைப் படி | குறிப்பு 02 | | | (1,207,176.00) |
| ஆண்டில் செலுத்தப்பட்ட பணிக்கொடை கொடுப்பனவு | | | | (914,996.00) |
| ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான மூலதனக் கொடுப்பனவு (செலவுத்தொகையின் இரு மடங்கு) | | | | (3,119,382.14) |
| வெளிநாட்டு நாணயமாற்றின் மீதான பெறுதிகள் இலாபம் / நட்டம் | | | | (1,942,245.39) |
| | | | | (14,644,117.28) |
| **ஆண்டுக்கான இலாபம்** | | | | **38,181,355.76** |
| வரிவிதிப்பு இலாபம் | | | | 38,181,355.76 |
| வரிவிதிக்கக்கூடியது 10% | @ | | 12% | 4,581,762.69 |
| **பங்கிலாப வரிக் கொடுப்பனவு** | | | | |
| வரி விதிப்பின் பின்னர் தேறிய இலாபம் | | | | 16,606,017.99 |
| கழிக்க: பெறப்பட்ட ஆதனம்,பொறித்தொகுதியும் உபகரணமும் | | | | (6,708,810.06) |
| கூட்டுக: ஆதனம்,பொறித்தொகுதி, உபகரணங்ளகின் தேய்மானம் | | | | 704,970.63 |
| வழங்கக்கூடிய இலாபம் | | | | 10,602,178.56 |
| செலுத்த வேண்டிய பங்கிலாபம் | | | | 1,060,217.86 |
| செலுத்த வேண்டிய பங்கிலாப வரி | | | | 106,021.79 |
| தேறிய கொடுப்பனவு | | | | 954,196.07 |

# கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்

## வருமான வரிக் கணிப்பு

**2012/13 ஆம் ஆண்டுக்கான மதிப்பீடு**

**குறிப்பு 01 : சொத்துக்கள் மீதான மூலதனக் கொடுப்பனவு**

| சொத்துக்கள் | கோரல் இல. | வீதம் | பெறுமதி | கோரல் |
|---|---|---|---|---|
| **கட்டடம்** | | | | |
| 2011/12 | 03 | 10% | 1,422,820.50 | 142,282.05 |
| 2012/13 | 02 | 10% | 4,554,425.27 | 455,442.53 |
| 2013/14 | 01 | 10% | 178,545.08 | 17,854.51 |
| **மின் உபகரணம்** | | | | |
| 2008/09 | 05 | 12.5% | 10,780.00 | 1,347.50 |
| 2010/11 | 04 | 12.5% | 446,810.00 | 55,851.25 |
| 2011/12 | 03 | 25.0% | 43,350.00 | 10,837.50 |
| 2012/13 | 02 | 25.0% | 868,548.00 | 217,137.00 |
| 2013/14 | 01 | 33.3% | 5,500.00 | 1,833.15 |
| **ஏனைய சொத்துக்கள்** | | | | |
| 2008/09 | 05 | 20% | 166,950.00 | 33,390.00 |
| 2010/11 | 04 | 20% | 91,800.00 | 18,360.00 |
| 2011/12 | 03 | 20% | 98,215.00 | 19,643.00 |
| 2012/13 | 02 | 20% | 357,100.00 | 71,420.00 |
| 2013/14 | 01 | 6.66% | 3,918,615.00 | 260,979.76 |
| **அலுவலக உபகரணங்கள்** | | | | |
| 2008/09 | 05 | 12.5% | 175,855.00 | 21,981.88 |
| 2009/10 | 05 | 12.5% | 181,927.67 | 22,740.96 |
| 2010/11 | 04 | 12.5% | 739,029.48 | 92,378.69 |
| 2011/12 | 03 | 20.0% | 439,580.58 | 87,916.12 |
| 2012/13 | 02 | 20.0% | 560,021.55 | 112,004.31 |
| 2013/14 | 01 | 20.0% | 187,396.25 | 37,479.25 |
| 2013/14 | 01 | 25.0% | 148,000.00 | 37,000.00 |
| **மின்பிறப்பாக்கி** | | | | |
| 2008/09 | 05 | 12.5% | 12,528,342.00 | 1,566,042.75 |
| 2009/10 | 05 | 12.5% | 794,707.00 | 99,338.38 |
| **பொறித்தொகுதியும் இயந்திரமும்** | | | | |
| 2010/11 | 04 | 12.5% | 3,476,500.00 | 434,562.50 |
| 2011/12 | 03 | 33.3% | 2,602,731.41 | 867,490.38 |
| 2012/13 | 02 | 33.3% | 6,403,622.68 | 2,134,327.44 |
| 2013/14 | 01 | 50.0% | 621,753.73 | 310,876.87 |
| **மோட்டார் வாகனம்** | | | | |
| 2013/14 | 01 | 20% | 1,649,000.00 | 329,800.00 |
| | | | | 7,460,317.75 |

**குறிப்பு 02: குத்தகை வாடகைப் படி**
**PB9721**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| குத்தகைப் கொடுப்பனவு | 03 | 6,035,880.00 | 20% | 1,207,176.00 | |
| செலுத்தப்பட்ட வாடகை | | | | 1,207,176.00 | 1,207,176.00 |
| | | | | | **1,207,176.00** |

# அறிவித்தல்

## கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்

**கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்டின்** வருடாந்தப் பொதுக்கூட்டம் 2014 செப்டம்பர் 26 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு கொழும்பு 02, சேர் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை, 1 ஆவது தளம், லேடி லொச்சர் பண்ட் பில்டிங் 100-1/3 கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட் சபை அறையில் நடைபெறும் என்று இத்தாள் அறிவித்தல் தரப்படுகின்றது.

=====================================================================

## நிகழ்ச்சிநிரல்

1. **அறிவித்தல்**

கூட்டத்தைக் கூட்டுவதற்கான அறிவித்தலைப் பெறுதல்.

2. **பணிப்பாளர்களின் அறிக்கை , கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள், மற்றும் கணக்காய்வாளர்களின் அறிக்கை**

பணிப்பாளர்களின் அறிக்கை மற்றும் 31 மார்ச் 2014 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளுடன் கணக்காய்வாளர்களின் அறிக்கையை பெறுதலும் கவனத்திலெடுத்தலும்

3. **பணிப்பாளர்களை மீளத்தெரிவுசெய்தல்**

அ) **திரு.ரி.எம்.ஏ.பங்சஜயா**

கம்பனியின் தாபன அமைப்பு விதிகளுக்கமைவாக சுழற்சி முறைப்படி இளைப்பாறும் மற்றும் மீள் தெரிவிற்குத் தன்னை முன் மொழிந்திருக்கும் திரு.ரி.எம்.ஏ.பங்சஜயா அவர்களை மீளத்தெரிவு செய்தல்.

ஆ) **திரு.ஏ.யு.எம்.யாசீர்**

கம்பனியின் தாபன அமைப்பு விதிகளுக்கமைவாக சுழற்சி முறைப்படி இளைப்பாறும் மற்றும் மீள் தெரிவிற்குத் தன்னை முன் மொழிந்திருக்கும் திரு.ஏ.யு.எம்.யாசீர் அவர்களை மீளத்தெரிவு செய்தல்.

இ) **திரு.எம்.எஸ்.எல்.அலிகான்**

கம்பனியின் தாபன அமைப்பு விதிகளுக்கமைவாக சுழற்சி முறைப்படி இளைப்பாறும் மற்றும் மீள் தெரிவிற்குத் தன்னை முன் மொழிந்திருக்கும் திரு.எம்.எஸ்.எல்.அலிகான் அவர்களை மீளத்தெரிவு செய்தல்.

4. **பங்கிலாபப் பிரகடனம்**

1,060,217.86 ரூபாவினை 31 மார்ச் 2014 ம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான இறுதிப்பங்கிலாபமாகப் பிரகடனப்படுத்தல்

5. **கணககாய்வாளர்களை மீளநியமித்தல்**

திரு/செல்வி பட்டயக் கணக்காளர்கள் றணவீர நாகசிங்க & கம்பனியை எதிர்வரும் ஆண்டுக்கான கம்பனியின் கணக்காய்வாளர்களாக மீள நியமித்தல் மற்றும் அவர்களது ஊதியத்தை தீர்மானிப்பதற்கான அதிகாரத்தை பணிப்பாளர்களிற்கு அளித்தல்.

6. அறக்கொடைகளுக்கான பங்களிப்பை தீர்மானிப்பதற்கான பணிப்பாளர்களுக்கு அதிகாரத்தை அளித்தல்.

7. உரிய முறையில் முன்னறிவித்தல் வழங்கப்பட்ட வேறு ஏதேனும் விடயங்கள்

**சபையின் கட்டளைப்படி**
**கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்**

எக்கவுண்டிங் சிஸ்ரம்ஸ் செக்ரேறியல் சேர்விஸ் (பிறைவேட்) லிமிட்டெட் செயலாளர்கள்
04.08.2014

## கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்

**100-1/3 சேர் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை, கொழும்பு 02**

### பதிலாள் படிவம்

கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்டின் அங்கத்தவராக இருக்கின்ற திறைசேரியின் செயலாளராகிய கீழே ஒப்பமிட்டுள்ள நான், ------------------------------------------------------------------------------ ஆம் இலக்கத்தில் (முகவரி) வசிப்பவராகியவரை திரு.-------------------------------------------------------- (பெயர்), அவர்களை எனக்கு பதிலாளராகவும், எனக்காகவும், என் சார்பாகவும் / அல்லது தீர்மானத்திற்கு எதிராகவும் வாக்களிப்பதற்கும் மற்றும் / அல்லது 2014.செப்டம்பர்.26 ஆம் திகதி நடைபெறவுள்ள கம்பனியின் வருடாந்தப் பொதுக்கூட்டத்திலும், அதில் ஏதேனும் ஒத்திவைப்பிலும், அதன் விளைவாக இடம்பெறக்கூடிய ஒவ்வொரு வாக்கெடுப்பிலும் பேசுவதற்கும் இத்தாள் நியமிக்கின்றேன்.

| | | சார்பாக | எதிராக |
|---|---|---|---|
| **1.** | 2014 மார்ச் 31 ம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களை அங்கீகரித்தல் | ☐ | ☐ |
| **2.** | திரு.ஏ.யு.எம்.யாசீர் அவர்களை கம்பனியின் பணிப்பாளராக மீளத்தெரிவு செய்தல் | ☐ | ☐ |
| **3.** | திரு.ரி.எம்.ஏ.பங்சஜயா அவர்களை கம்பனியின் பணிப்பாளராக மீளத்தெரிவு செய்தல் | ☐ | ☐ |
| **4.** | திரு.எம்.எஸ்.எல்.அலிகான் அவர்களை கம்பனியின் பணிப்பாளராக மீளத்தெரிவு செய்தல் | ☐ | ☐ |
| **5.** | 1,060,217.86 ரூபாவினை 31 மார்ச் 2014 ம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான இறுதிப் பங்கிலாபமாகப் பிரகடனப்படுத்தல் | ☐ | ☐ |
| **6.** | பட்டயக் கணக்காளர்கள் திரு/செல்வி றணவீர நாகசிங்க & கம்பனியை கம்பனியின் கணக்காய்வாளர் களாக நியமித்தல். | ☐ | ☐ |
| **7.** | அறக்கொடைகளுக்கான பங்களிப்பை நிறுவுவதற்கு பணிப்பாளர்களுக்கு அதிகாரத்தை அளித்தல். | ☐ | ☐ |
| **8.** | உரிய முறையில் முன்னறிவித்தல் வழங்கப்பட்ட வேறு ஏதேனும் விடயங்கள் | ☐ | ☐ |

.............................................................

பங்குதாரர்

2014, .....................மாதம்....................ஆம் நாளில் கையொப்பமிடப்பட்டது.